Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, NOVEMBER 17, 2021

வியாழக்கிழமை நவம்பர் 17, 2022 | ஒளி: 08 கதிர்: 145 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

# விலைகளை குறைத்தது சதொச

லங்கா சதொச, நேற்று (16) முதல் அமலுக்கு வரும் வகையில் அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றின் விலைகளை அதிரடியாகக் குறைத்துள்ளது.

அதனடிப்படையில் பருப்பு ஒரு கிலோ கிராம் 9 ரூபாவாலும், உள்நாட்டு டின் மீன் 425 கிராம் 45 ரூபாவாலும், ஒரு கிலோ கிராம் அரிசி 5 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது.



## இலங்கைக்கு இனிமேலும்

# உதவிகள் கிடையாது

## சீனா அறிவிப்பு: மீட்க முதலிடுகளை செய்கிறோம் என்கிறது சீனா

இலங்கைக்கு பாரியளவில் நிதி உதவிகளை வழங்கப்போவதில்லை. கடன்களை தரப்போவதும் இல்லை. நிதி உதவிகளின் மூலம் நாட்டை மீட்டெடுக்க முடியாது என்றே நாம் கருதுகின்றோம் எனத் தெரிவித்துள்ள வெளிநாட்டு நட்புறவுக்கான சீன மக்கள் சங்கத்தின் தலைவர் லின் சொங்டியன், மாறாக பாரியளவிலான முதலீடுகளை செய்யும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம் என்றார். சகல நாடுகளின் முதலீடுகளையும் பெற்றுக்கொண்டு பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியுமென தெரிவித்துள்ள லின் சொங்டியன், எம்மிடம் பலமான முதலீட்டாளர்கள் உள்ளனர். சிறந்த நிறுவனங்கள் உள்ளன. அவர்களுடன் இணைந்து நாட்டை மீட்டெடுக்க எம்முடன் கைகோருங்கள் எனவும் அழைத்துள்ளார்.

இலங்கை -சீன நட்புறவு குறித்து கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

வரலாற்று முக்கியத்துவம் வாய்த்த ஒழுக்கமுறைகளை கொண்ட நாடாகவே இலங்கை காணப்படுகின்றது. இது குறித்து நாம் பெருமைப்படுகின்றோம். 1950களிலும் அதன் பின்னரும் தொடர்ச்சியாக நாம் இலங்கைக்கு வருகை தந்துள்ளோம்.

தொடர்ச்சி P2

# தடை நீக்கத்துக்கு கனடிய தமிழ் காங்கிரஸ் நன்றி

நல்லிணக்கச் செயற்பாட்டில் பங்கேற்பதற்கு வசதியாக கனடிய தமிழ் காங்கிரஸ் அமைப்பை தடை பட்டியலில் இருந்து நீக்கிய இலங்கை அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் வகையில், நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவைச் சந்தித்து கனடிய தமிழ் காங்கிரஸின் உறுப்பினர் பஞ்சலிங்கம் கந்தையா கலந்துரையாடியுள்ளார். சமாதானம் மற்றும் நல்லிணக்கச் செயன்முறைகளை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் சரியான வழிகாட்டலுக்குப் பாராட்டு தெரிவித்த அதேவேளை, நீண்டகால நல்லிணக்கத்தை நிலைநாட்டுவதற்கும் இலங்கையின் அடையாளத்தை அங்கிகரித்து மரியாதை செய்வதற்கும் அவசர அடிப்படையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



# வேந்தராக நியமனம்



தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் வேந்தராக ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வழக்கப்பட்டுள்ளது. இவர், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் வேந்தராக செயற்படுவார்.

# உள்வீட்டு முரண்களை தமிழ்த் தரப்பு களையவும்



தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பற்றிப் பேசுவதற்கான சூழல் உருவாகியுள்ள நிலையில், தமிழ் அரசியல் தரப்புகள் தமக்கிடையிலான முரண்பாடுகளை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

தமிழர் தரப்புகளுக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடுகளும், உட்கட்சி முரண்பாடுகளும் கடந்த காலங்களில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை பலவீனப்படுத்தி இருக்கின்றன.

தொடர்ச்சி P2

# மகனை வழியனுப்பிவிட்டு திரும்பியவர்கள் விபத்தில் சிக்கினர்




மதுகம, மீகஹதென்ன, கல்முல்ல பிரதேசத்தில் நேற்று (16) காலை இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் மரணமடைந்துள்ளார். 11 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என மீகஹதென்ன பொலிஸார் தெரிவித்தனர்.

தன்னுடைய மகனை வெளிநாட்டுக்கு அனுப்பிவைத்துவிட்டு, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நேற்று (16) காலை 5 மணியளவில் உறவினர்களுடன் திரும்பிக்கொண்டிருந்த போதே, சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கத்தால், வீதியை விட்டு விலகி, வான் விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

அதில் சிலர், மேலதிக சிகிச்சைகளுக்காக களுத்துறை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

## உயர்நீதிமன்றத்தில் நிபந்தனையற்ற

# மன்னிப்பு கோரினார் பொலிஸ்மா அதிபர்

## நிலுவை சம்பளத்துடன் மெண்டிஸை பணியில் அமர்த்துவதாக உறுதி

உயர்நீதிமன்றத்தின் உத்தரவை பின்பற்றாமைக்கு நிபந்தனையற்ற மன்னிப்பு தெரிவித்த பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்தன, நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் நிலுவை சம்பளத்துடன் உப பொலிஸ் பரிசோதகர் சுதத் மெண்டிஸ் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவார் எனவும் உயர்நீதிமன்றத்தில், நேற்று (16) உறுதியளித்தார்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்தன, பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான மஹிந்த குணரத்தன, ஜே.எஸ். வீரசேகர, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களான எம்.என்.எஸ்.மெண்டிஸ், சனத் குமார ஆகியோரை நேற்று (16) மன்றில் ஆஜராகுமாறு, செப்டெம்பர் 23ஆம் திகதி உயர்நீதிமன்றம் நோட்டீஸ் பிறப்பித்திருந்தது. சுதத் மெண்டிஸின் அடிப்படை உரிமைகள் மீறல் மனு, நீதியரசர்களான எஸ்.துரைராஜா, பிரியந்த ஜயவர்தன, மஹிந்த சமயவர்தன ஆகியோரடங்கிய குழாம் முன்னிலையில் நேற்று (16) எடுத்துக் கொள்ளப்பட்ட போது,

தொடர்ச்சி P2

# சம்பள அதிகரிப்புக்கான பேச்சுவார்த்தை ஆரம்பம்

பா.நிரோஸ்



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டுமென தெரிவிக்கும் பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பதிரண, இதற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# தமிழக முதலமைச்சரை சந்தித்து செந்தில் தொண்டமான் பேச்சு



தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் நவம்பர் 15 ஆம் திகதி சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இலங்கை மக்களுக்கு கடந்த காலங்களில் தமிழக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மனிதாபிமான உதவித் திட்டங்களுக்கு செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்ததுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இ.தொ.

தொடர்ச்சி P2

## இனப்பிரச்சினை தீர்வுக்கான கலந்துரையாடல்களில்

# கிழக்கையும் இணைக்கவும்



பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான வாக்கெடுப்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எதிர்த்தே வாக்களிக்கும் என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த பேச்சுவார்த்தைகளில் நாம் கடந்த காலங்களில் ஏமாற்றப்பட்டுள்ளோம்.

தொடர்ச்சி P2

# கலைக்க முடியாது

பா.நிரோஸ்



தற்போதைய அரசாங்கம், கட்சிகள் பல இணைந்து இணக்கப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ளதால் பாராளுமன்றத்தை கலைக்க முடியாது என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (16) எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கமானது பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசிய கட்சி, மகஜன எக்சத் பெரமுன, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், ஈ.பி.டி.பி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மை குழு ஆகியவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்ததாக அமைக்கப்பட்ட கூட்டு அரசாங்கமாகும்.

இது இணக்கப்பாடுகளுடன் அமைக்கப்பட்ட அரசாங்கம் என்பதால், பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது.

தற்போதை அரசாங்கம் கூட்டு அரசாங்கமாகும். இதனை நீங்களும் ஏற்றுக்கொண்டுள்ளீர்கள். இது இணக்கப்பாடுகளுடன் அமைக்கப்பட்ட அரசாங்கமாகும். இதைக் கலைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றார்.

## மில்லினிய மாணவர்களை

# சித்திரவதை செய்த அதிபர், பொலிஸார் 2 பேருக்கு பிணை

பாணந்துறை, மில்லினிய குங்கமுவ கனிஷ்ட பாடசாலை மாணவர்களை சித்திரவதை செய்த குற்றச்சாட்டு தொடர்பில் கைதுசெய்யபட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பாடசாலை அதிபர், பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிளை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம், நேற்று (16) பிணையில் விடுவித்தது. மேலதிக நீதவான் கெமிந்த பெரேரா முன்னிலையில் பிணை மனு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அவர்களை தலா 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு உத்தரவிட்ட நீதவான், நீதவான் விசாரணைக்கான தினமாக ஜனவரி 18ஆம் திகதியை குறித்தார்.

தொடர்ச்சி P2

# மன்னார் மறைமாவட்ட ஆயர் ஜனாதிபதியை சந்தித்தார்



மன்னார் மறைமாவட்ட ஆயர் பிடெல்ஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை உள்ளிட்ட குழுவினர் நேற்று (16) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தனர்.

மன்னார் காணிப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியிடம் விளக்கமளிக்கப்பட்டதுடன், அது தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாண உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# திலினி உட்பட 4 பேருக்கு 30 வரை விளக்கமறியல்

நிதி மோசடி குற்றச்சாட்டு குறித்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த திகோ நிறுவனத்தின் தலைவர் திலினி பிரியமாலி, ஜானகி சிறிவர்தன, பொரளை சிறிசுமண தேரர், இசுரு பண்டார ஆகியோரை, நவம்பர் மாதம் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் திலின கமகே, நேற்று (16) உத்தரவிட்டார். ஸ்கைப் தொழில்நுட்பம் மூலம் சந்தேகநபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்திலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## ஹிருணிகாவின் வழக்கு:

# இதுவே கடைசி முறை; நீதிபதி அறிவிப்பு

## 6 வருடங்களில் 14ஆவது முறையாக ஒத்திவைப்பு

கொழும்பு, தெமட்டக்கொடை பகுதியில் இளைஞரொருவர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் மேலதிக சாட்சிய விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதம் 30 ஆம் திகதி இடம்பெறும் என்றும் சாட்சிய விசாரணை ஒத்திவைக்கப்படுவது இதுவே கடைசி முறை என்றும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா, நேற்று (16) அறிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# உதவிகள் கிடையாது

ஒரு நாட்டை எவ்வாறு வர்த்தக பொருளாதாரத்துக்குள் கொண்டு நகர்த்துவது என்பதை இலங்கையிடம் கற்றுக்கொள்ள நாம் இங்கு வந்தோம் என்றார்.

அதேபோல் சிங்கப்பூரும் உங்களிடம் கற்றுக்கொள்ளவே இங்கு வந்தது. சீனாவை உலகுடன் இணைப்பது எவ்வாறு என்பதை நாம் சிங்கப்பூரிடம் கற்றுக்கொண்டோம். அதேபோல் இலங்கை- சீன நட்புறவானது நீண்டகாலமாக கையாளப்பட்டு வருகின்றது என நினைவூட்டினார்.

உலகில் 20 மில்லியன் மக்கள் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர்.வறுமை ஒழிப்பு வேலைத்திட்டத்தில் அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் மட்டுமல்ல இலங்கையுடனும் இணைந்து பணியாற்ற நாம் விரும்புகின்றோம் என்றார். கொழும்பு துறைமுக நகரானது இந்த நாட்டின் நம்பிக்கை என்றே நாம் கருதுகின்றோம். ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை புதுப்பிக்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும், அதேபோல் தொழில் பேட்டையும் உருவாக்கப்படும். பாரிய முதலீட்டு வலயமொன்று இங்கு உள்ளது. இங்கு சீனாவுக்கு மட்டுமல்ல சகல நாடுகளுக்கும் அது திறந்தே உள்ளது என்றார்.

நாடு இப்போது பொருளாதார வளர்ச்சியை நோக்கி செல்ல வேண்டும் என்பதையே இலங்கையின் இன்றைய நிலை எமக்கு கூறும் படிப்பினையாகும். நாம் உங்களுக்கு பாரிய அளவில் நிதி உதவிகளை வழங்கப்போவதில்லை. கடன்களை தரப்போவதும் இல்லை. பணம் மூலம் உதவிகளை செய்து நாட்டை மீட்டெடுக்க முடியாது என்றே நாம் கருதுகின்றோம் என்றார்.

ஒருவர் உங்களுக்கு மீனை கொடுக்க முடியும். ஆனால் உண்மையான நண்பன் மீனை எவ்வாறு பிடிப்பது என்பதையே கற்றுக்கொடுப்பார். நாமும் அதனையே செய்கின்றோம். நாம் உங்களுக்கு மீன்களை கொடுக்க மாட்டோம், மாறாக மீனை பிடிக்கும் சகல வசதிகளையும் செய்து கொடுப்போம் என்றார்.

நாட்டின் நீண்டகால அபிவிருத்தியை இலக்காக கொண்டே நாம் இங்கு முதலீடுகளை செய்கின்றோம். இலங்கைக்கு முதலீட்டாளர்களை வரவழைக்க இதுவே சரியான சதர்ப்பமாகும். நெருக்கடிகால நிலைமையில் நாமும் இலங்கையுடன் இணைந்து பணியாற்ற தயாராக உள்ளோம். எம்மிடம் பலமான முதலீட்டாளர்கள் உள்ளனர். சிறந்த நிறுவனங்கள் உள்ளன. அவர்களுடன் இணைந்து நாட்டை மீட்டெடுக்க எம்முடன் கைகோருங்கள் என்றார்.

# உள்வீட்டு முரண்களை தமிழ்த் தரப்பு களையவும்

அந்த அனுபவத்தினை மறந்துவிடக் கூடாது எனவும் சுட்டிக்காட்டி யுள்ளார்.

இதுதொடர்பாக கடற்றொழில் அமைச்சர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், தமிழ் தேசியக் கூட்டமைப்பில், கொள்கை ரீதியான உடன்பாடுகள் ஏதுமின்றி, தேர்தல் வெற்றிகளை இலக்காக் கொண்டே கட்சிகள் இணைந்திருக்கின்றன என்பது வெளிப்படையானது.

எனினும், கடந்த காலங்களில் தலைமைக்கான போட்டிகளும், அதனால் உருவாகிய முரண்பாடுகளுமே தமிழ் மக்கள் சார்பில் முன்னெடுக்கப்பட்ட சாத்வீகப் போராட்டங்களும் ஆயுதப் போராட்டமும் வலுவிழந்து போனமைக்கான பிரதான காரணமாக அமைந்திருந்ததுடன், கிடைத்த சந்தர்ப்பங்கள் பல கைநழுவிப் போவதற்கும் காரணமாக இருந்தது.

எனவே, தற்போது உருவாகியுள்ள சூழலையும் தவறவிடாது பயன்படுத்திக் கொள்வதற்கு, தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட்ட அனைத்து தரப்பினரும், காலத்தை வீணடிக்காது விட்டுக்கொடுப்புக்களின் மூலம் தமக்கு உள்ளே இருக்கின்ற பிரச்சினைகளையும், தமக்கு இடையிலான பிரச்சினைகளையும் தீர்த்துக்கொண்டு முன்னோக்கி நகர வேண்டும்" என்று அழைப்பு விடுத்துள்ளார்.

# சம்பள அதிகரிப்புக்கான பேச்சுவார்த்தை ஆரம்பம்



தேயிலையின் விலை எங்களது ஆட்சிக் காலத்தில் உயர்ந்துள்ளன. சிறுதோட்ட உடமையாளர் என்ற வகையில் சஜித் பிரேமதாஸவுக்கு இது தெரியும். மத்திய வங்கியின் அறிக்கையின் படி வரலாற்றில் முதற்தடவையாக கடந்த வருடத்திலேயே தேயிலைத் தொழிற்துறைக்கு 3.8 பில்லியன் கிடைத்துள்ளது. இது பொய்யென எதிர்க்கட்சி தலைவர் சஜித் நிரூபித்தால், நாளையே அமைச்சுப் பதவியை துறக்க தயார் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (16) அமர்வில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தால் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளத்தை வழங்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தாலும், அதனை எங்களது அரசாங்கமே சாத்தியப்படுத்தியது. கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாக ஆயிரம் ரூபாய் சம்பளத்தை வழங்குவதற்கு பெருந்தோட்ட நிறுவனங்கள் மறுத்ததால், சம்பள நிர்ணய சபையின் ஊடாக ஆயிரம் ரூபாய் சம்பளத்தை நாம் பெற்றுகொடுத்தோம். பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் நாட்சம்பளம் போதாது என்பதால், சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதகாவும் தெரிவித்தார்.

# மன்னிப்பு கோரினார் பொலிஸ்மா அதிபர்

நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டிருந்த பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட நால்வரும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்தத் தவறியதற்காக, பிரதிவாதிகள் நிபந்தனையற்ற மன்னிப்பு கோருவதாக அவர்கள் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புல்லே, மன்றுக்கு அறிவித்தார்.

பொலிஸ் திணைக்களத்தின் நிர்வாகத் தாமதத்தால் நீதிமன்ற உத்தரவை அமல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், நீதிமன்ற உத்தரவின்படி மனுதாரரான உப பொலிஸ் பரிசோதகர் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவார் என்றும் அவர் தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுடன் கைது செய்யப்பட்டு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட சீ.ஐ.டியின் முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர் சுகத் மெண்டிஸின் சம்பளத்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

2022ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவை அமுல்படுத்துவதற்கு தாமதம் ஏற்பட்டதையடுத்தே நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது.

கோடீஸ்வர தொழிலதிபர் மொஹமட் ஷியாம் கொலை வழக்கில் மரண தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன மற்றும் அவரது மகன் உள்ளிட்ட 4 பேரை குற்றம் சாட்டுவதற்காக ஷானி அபேசேகர, ஆயுதங்களை தொடர்புபடுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டது.

அந்த வழக்கில் தனது உயர் அதிகாரி ஷானியுடன் குறித்த குற்றத்தை புரிந்ததாக, மெண்டிஸ் கைது செய்யப்பட்டு 11 மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், முறைப்பாடுகளில் உள்ள முரண்பாடான நிலைப்பாடுகளைக் குறிப்பிட்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் ஷானி அபேசேகரவுடன் சுதத் மெண்டிஸுக்கும் பிணை வழங்கியது.

தான் பணிநீக்கம் செய்யப்பட்டு சம்பளம் உள்ளிட்ட தனது உரிமைகள் மறுக்கப்பட்டமை மற்றும் தனக்கும் தனது குடும்பத்துக்கும் ஏற்பட்ட துன்புறுத்தல் நடவடிக்கைகள் தனது அடிப்படை உரிமைகளை மீறுவதாக மெண்டிஸ், தனது மனுவில் சுட்டிக்காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# திலினி உட்பட 4பேருக்கு 30...

கடந்த அமர்வில், சந்தேக நபர்கள் தொடர்பான விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை என்பதாலும் இவர்களுக்கு பிணை வழங்கினால், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்பட வாய்ப்புள்ளது என்ற காரணத்தையம் கருத்திற் கொண்ட நீதவான், பிணை கோரிக்கையை நிராகரித்திருந்தார்.

திலினி பிரியமாலிக்கு சொந்தமான ஏழு வர்த்தக நிறுவனங்களில் தமது பணத்தை முதலீடு செய்த பல அரசியல்வாதிகளும் பிரபலங்களும், பல்வேறு காரணங்களுக்காக பொலிஸில் முறைப்பாடு செய்யவதற்கு தயங்குகின்றனர் என்று, குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் (சீ.ஐ.டி) முன்னைய அமர்வில் அறிவித்திருந்தனர்.

மோசடியான முறையில் பெறப்பட்ட பணத்தில் வருமானம் ஈட்டாமல், சந்தேகநபர் எவ்வாறு 41 இலட்சம் ரூபாயை மாதாந்தம் செலவிட்டார் என்பது குறித்த விவரம் இதுவரையில் வெளிவரவில்லை என்றும் சீ.ஐ.டியினர் அறிக்கை சமர்ப்பித்திருந்தனர்.

பிரதான சந்தேகநபரான திலினி பிரியமாலிக்கு எதிராக நீதவான் நீதிமன்றங்கள் மற்றும் மேல் நீதிமன்றத்தில் ஏழு நீதிமன்ற வழக்குகள் தற்போது நிலுவையில் இருப்பதாகவும் மன்றுக்கு சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழக முதலமைச்சரை...



காவின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் மற்றும் தவிசாளர் ராமேஸ்வரன் ஆகியோர் நன்றி தெரிவித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையில் உள்ள மலையக மக்களுடைய பிரச்சினைகள் குறித்தும் இவ்விருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தியாவில் தமிழகத்தில் உள்ள கூடலூரில் TENTEA நிறுவனத்தின் கீழ் வேலைசெய்யும் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு புலம்பெயர்ந்த மலையக தமிழர்களை அவர்களது குடியிருப்புக்களில் இருந்து வெளியேருமாறு வனத்துறையினர் சட்டப்பூர்வ அறிவிப்பு வழங்கியுள்ள நிலையில், அங்கு நேரடி விஜயம் மேற்கொண்டு அம்மக்களுடன் கலந்துரையாடிய செந்தில் தொண்டமான், இப்பிரச்சினைக் குறித்து முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

தற்காலிகமாக அம்மக்கள் அக்குடியிருப்புகளில் இருப்பதற்கும்,தமிழக அரசு இலவசமாக 650 புதிய வீடுகளை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென முதலமைச்சரிடம் செந்தில் தொண்டமான் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக தமிழக அரசால் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு, TENTEA தொழிலாளர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கவும், அவர்களுக்கு தமிழக அரசின் நிதி ஒதுக்கீட்டில் 650 வீடுகள் இலவசமாக அமைத்துக் கொடுப்பதற்கான அறிவித்தலை தமிழக அரசு விரைவில் வெளியிடுமென அறிவித்தார்.

இந்தியாவில் PETA அமைப்பினால் ஜல்லிக்கட்டு தடைசெய்யப்பட வேண்டுமென தொடரப்பட்ட வழக்கை தமிழக அரசுடன் இணைந்து ஜல்லிகட்டு பாதுகாப்பு நலசங்கம் சட்ட ரீதியாக இவ்வழக்கை சந்தித்து உரிய அனுமதியை பெற்றுக் கொடுத்தது.

இந்நிலையில், ஜல்லிக்கட்டு தடைசெய்யப்பட வேண்டுமென மீண்டும் PETA அமைப்பினால் வழக்கு தொடரப்பட்டுள்ள நிலையில்,தமிழக அரசு இவ்விடயத்தில் தலையிட்டு நிரந்தர தீர்வு பெற்றுத்தர வேண்டுமென செந்தில் தொண்டமான் கோரிக்கை விடுத்தார்.

அதற்கு பதிலளித்த முதல்வர் இந்த வருடம் போன்றே எதிர்காலத்திலும் எந்தவித பிரச்சினைகளும் இன்றி ஜல்லிக்கட்டு நடைபெற தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுமென்று தெரிவித்தார். மேலும் இச்சந்திப்பில் பாரதியார் கவிதைகள் புத்தகமொன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

# கிழக்கையும்...

தமிழ் மக்களின் இனப் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகளில் கிழக்கு மாகாண கட்சிகளையும் ஒன்றிணைத்துக்கொண்டு பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்

அரசியல் கைதிகள் பலர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். எனினும் இதில் சில குறைப்பாடுகள் உள்ளன. 13 வருடங்களாக சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் நால்வருக்கு புதிதாக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. கிருபாகரன், எஸ்.எல். கூரே, நிமலன் மற்றும் குகதாசன் ஆகிய நால்வருக்குமே கொழும்பு, பதுளை நீதிமன்றங்களில் வழங்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

முல்லைத்தீவு வட்டுவாகாலில் தமிழர் நிலங்களை கடற்படையினர் அபகரித்துள்ளனர். வடக்கு, கிழக்கில் தமிழர்களின் பூர்வீகக் காணிகளை படையினர் அபகரிக்கும் செயற்பாடுகள் தொடர்ந்து காணப்படுகிறன. யுத்தம் நிறைவடைந்த பின்னரும் ஏக்கர் கணக்கான நிலங்களில் படை முகாம்கள் காணப்படுகிறன. எங்களது விவசாய நிலங்களை அபகரித்து படையினர் விவசாயம் செய்கிறார்கள். முப்படையில் உள்ள 9 இலட்சம் பேருக்குத் தேவையானதைவிட அதிகளவான நிலங்களை படையினர் அபகரித்து வைத்துள்ளனர்.

பெருந்தோட்டத்துறையில் மலையகத்துக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை. இதனை கண்டிக்கிறோம். இதற்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும். தொல்பொருள் ஆராய்ச்சி எனக் கூறிக்கொண்டு பௌத்த விஹாரைகளே நிறுவி வருகிறார்கள். குறுந்தூர் மலையில் உள்ள 600 ஏக்கர் நிலங்களை அபகரிக்க முயல்கிறார்கள். எனவே இந்த திணைக்களங்களின் ஆதிக்கத்தை ஜனாதிபதி அனுமதிக்கக்கூடாது எனவும் தெரிவித்தார்.

விவசாயத்துக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி பற்றாக்குறையாகவே இருக்கிறது. பாதுகாப்பு அமைச்சுக்கு பெறும் நிதியை ஒதுக்கீடு செய்துவிட்டு கடற்றொழிலுக்கு வெறும் 6 பில்லியன் ரூபாயே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது எந்தவகையில் நியாயம் எனவும் கேள்வி எழுப்பினார்.

# இதுவே கடைசி முறை:

அதிகுற்றப்பத்திரத்தில் பட்டியலிடப்பட்டுள்ள வீடியோ ஆதாரங்களின் உள்ளடக்கத்தை ஆய்வு செய்ய கால அவகாசம் தேவை என்றும் வழக்கு விசாரணையை ஒத்திவைக்குமாறும் பிரதிவாதி ஹிருணிகா பிரேமச்சந்திர சார்பில் ஆஜரான சட்டத்தரணி அஷான் பெர்னாண்டோ மன்றில் கோரி நின்றார். இந்த வழக்கின் சாட்சிய விசாரணை 6 வருடங்களாக பிற்போடப்பட்டு வருவதாக முறைப்பாட்டாளர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக பண்டார, மன்றின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

இதனையடுத்தே, சாட்சிய விசாரணைக்காக தினமாக ஜனவரி மாதம் 30ஆம் திகதியை குறித்த நீதிபதி, கடைசி முறையாக சாட்சிய விசாரணை ஒத்திவைக்கப்படுவதாக அறிவித்தார்.

2015ஆம் ஆண்டு டிசெம்பர் 21ஆம் திகதியன்று, ஹிருணிகா எம்.பிக்குச் சொந்தமான டிபெண்டர் ரக வாகனத்தில் வந்து தெமட்டகொட பகுதியில் வைத்து இளைஞனொருவரைக் கடத்திய சம்பவம் தொடர்பில் ஹிருணிக்கா மற்றும் மெய்ப்பாதுகாவலர்கள் உட்பட 9 பேருக்கு எதிராக சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்குடன் தொடர்புடைய எண்மர் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதுடன், ஹிருணிகா எம்.பி தன்மீதான குற்றச்சாட்டை மறுத்திருந்தார். எண்மரில் ஒருவர் 18 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர் (8ஆவது குற்றவாளி) என்பதால் அவர் விடுவிக்கப்பட்டார்.

ஹிருணிகா பிரேமச்சந்திர மற்றும் பாடசாலை மாணவர் ஒருவரைத் தவிர, குற்றத்தை ஒப்புக்கொண்ட மற்ற ஏழு குற்றவாளிகளுக்கும் 12 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மேலும், 2, 8ஆவது குற்றவாளிகள் தவிர அறுவருக்கு தலா 32,000 ரூபாய் தண்டப்பணம் விதித்ததுடன், தாக்கப்பட்ட நபருக்கு 285,000 ரூபாய் நட்டஈடு வழங்குமாறும் கட்டளையிடப்பட்டது.

இதேவேளை, தமது சிரேஷ்ட வழக்குரைஞர் அஷான் பெர்னாண்டோ சுகயீனமடைந்துள்ளதால் மேலதிக சாட்சிய விசாரணைக்காக பிறிதொரு தினத்தை அறிவிக்குமாறு ஹிருணிக்கா சார்பில் ஆஜரான சட்டத்தரணி, ஓகஸ்ட் 24ஆம் திகதி மன்றில் அறிவித்தமைக்கு அமைய, நேற்று வரை சாட்சிய விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

மேலும், குறித்த வழக்கின் சாட்சிய விசாரணை கிட்டத்தட்ட 13ஆவது தடவையாக ஒத்திவைக்கப்படுவதாக கடந்த அமர்வின் போது, திறந்த நீதிமன்றத்தில் நீதிபதி சுட்டிக்காட்டியிருந்தார்.

# சித்திரவதை செய்த அதிபர்,...

பாடசாலை ஆசிரியர் ஒருவரின் பணத்தை திருடியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் மூன்று மாணவர்களை தாக்கி, ஜீப்பில் அழைத்துச் சென்ற போது மின்சாரம் பாய்ச்சிய குற்றச்சாட்டின் பேரில் 3 பொலிஸ் அதிகாரிகள், அதிபர் மற்றும் பிரதி அதிபர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் கைதுசெய்யப்பட்ட ஐவரையும் கடந்த 8ஆம் திகதி மன்றில் ஆஜர்படுத்திய போது, பிரதி அதிபர் மற்றும் பொலிஸ் ஜீப்பின் சாரதி (கான்ஸ்டபிள்) ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், ஏனைய மூவரும் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், நேற்றையதினம் அவர்களது வழக்கு விசாரணைக்கு வந்தபோதே பிணை மனு ஆராயப்பட்டு பிணை வழங்கப்பட்டது. பாடசாலை நூலகத்தில் வைத்து மாணவர்களுக்கு கடுமையான தடியடி மற்றும் பொலிஸ் ஜீப்புக்குள் மின்சாரம் தாக்கப்பட்டு மாணவர்களுக்கு காயங்களை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மன்றுக்கு அறிவித்திருந்தது. மேலும், குற்றச்சாட்டு தொடர்பில் கைதுசெய்யபட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அதிபரை பணி இடைநீக்கம் செய்துள்ளதாக மேல் மாகாண கல்வித் திணைக்களம் கடந்த 9ஆம் திகதி அறிவித்துள்ளது.

# மன்னார் மறைமாவட்ட...

மடு யாத்திரைக்கு வரும் பக்தர்களுக்கு தேவையான வசதிகளை செய்து தருவது தொடர்பிலும் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில், அருட்தந்தை ஜொய்ஸ் பெப்பி சொசாய் (Joyce Peppi Sosai Santia) அருட்தந்தை ஆண்டனி சொசாய் (Antony Sosai) உள்ளிட்ட அருட்தந்தையர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்தன ஆகியோரும் கலந்து கொண்டனர்.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

இனப்பிரச்சினைக்கான

# தீர்வை அரசாங்கத்திடம் பெற்றுக்கொள்ள முடியும்

கலந்துரையாடல்கள் மூலமாக தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ள கூட்டமைப்பு விரும்பினால், தீர்வைப் பெற்றுத்தரக்கூடிய சிறந்த அரசாங்கம் தற்போதைய அரசாங்கம், எனவே இந்த அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி தீர்வை பெற்றுக்கொள்ள வேண்டும் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பல அனுபவங்களைக் கொண்ட முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இருக்கின்றனர். தனி ஒரு எம்.பியாகப் பாராளுமன்றத்துக்கு வந்து ஜனாதிபதியாக ரணில் பதவியேற்றுக் கொண்டுள்ளார். எனவே கட்சியை பலப்படுத்துவதற்குப் பதிலாக நாட்டை கட்டியெழுப்புவார் என்ற பெரும் நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

எனவே, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் கூட்டமைப்பினரும் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும். எல்லாவாற்றையும் அவநம்பிக்கையுடன் பேச வேண்டாம். எங்களது நம்பிக்கையை மஹிந்த, ரணில் ஆகியோர் இல்லாது செய்துவிட்டார்கள் என்று கூறிக்கொண்டிருக்க வேண்டாம். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இவர்கள் அனைவரும் தீர்வை வழங்க முயற்சித்தார்கள்.இதனை தனிப்பட்ட வகையில் நான் அறிவேன் எனவும் தெரிவித்தார்.

கூட்டமைப்பின் அர்ப்பணிப்பும் இதற்குத் தேவை. புலம்பெயர் அமைப்பினரின் ஒத்துழைப்புகள் இப்போது நாட்டுக்கு தேவை. தற்போதைய அரசாங்கம் பல சந்தேக நபர்களை விடுதலை செய்துள்ளது. மஹிந்தவின் காலத்திலிருந்தே இவ்வாறு சந்தேகநபர்கள் விடுதலை செய்யப்பட்டு வந்துள்ளனர். எனவே சந்தேகத்துடனும்,



அவநம்பிக்கையுடன் செயற்படாது தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் என பிரிந்திருக்காது, நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மலையகத்தில்

# வறுமை நிலை 52% அதிகரிப்பு

நாடு முழுவதிலும் வறுமை நிலைமை 26 சதவீதமாகக் காணப்படுகின்ற நிலையில், மலையகத்தில் மாத்திரம் வறுமை நிலைமை 52 சதவீதமாகக் காணப்படுவதாகத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க, நாடு 2005ஆம் ஆண்டு நிலைக்கு சென்றுவிட்டதாகவும் தெரிவித்தார். அரச செலவுகளைக் குறைப்பதற்கான முன்னுதாரணங்களை ஜனாதிபதி, அமைச்சர்கள் வழங்க வேண்டும். அவ்வாறில்லாது அரச செலவீனங்களைக் குறைக்க முடியாது. இதற்கான முறையான வேலைத்திட்டங்கள் அவசியம் என்றார்.

அரச நிறுவனங்களை விற்பனை செய்வதன் ஊடாக எதிர்பார்க்கப்படும்



வருமானங்கள் கிடைப்பதில்லை. காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 2002ஆம் ஆண்டு விற்பனை செய்யப்பட்டது. அரசாங்கத்துக்கு ஒரு காப்புறுதி நிறுவனமாவது வேண்டும். இந்நிறுவனம் நட்டமடையும் நிறுவனமல்ல. எனவே இதனை நாசம் செய்ய வேண்டாம் எனவும் தெரிவித்தார். வரி அதிகரிப்பால் சமூகத்தில் ஏற்படும் குழப்பங்களுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது, வர்த்தகர்கள் இந்த வரிகளை எவ்வாறு செலுத்துவார்கள் என்பதையும் சிந்திக்க வேண்டும். எனவே, ஒரு கோணத்தைப் பார்த்து மாத்திரம் நடவடிக்கை எடுத்தால் பாரிய விளைவுகள் ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

தொழில் வாய்ப்பின்மை இரு மடங்காகியுள்ளதாக உலக வங்கி கூறுகிறது. 2005ஆம் ஆண்டு காணப்பட்ட வறுமை நிலைமை மீண்டும் ஏற்பட்டுள்ளது. நாடு மீண்டும் 2005ஆம் ஆண்டுக்கே சென்றுள்ளது. 2025ஆம் ஆண்டு ஆகும்போது நாடு மீண்டும் 1990ஆம் ஆண்டுக்கு செல்லும். மலையகத்தில் வறுமை நிலைமை 52 சதவீதமாக இருக்கிறது. முழுநாட்டிலும் 26 சதவீதமாக இருக்கும் வறுமை நிலை, மலையகத்தில் மாத்திரம் 52 சதவீதமாகியுள்ளது எனவும் தெரிவித்தார்.

# எம்முடனும் ஜனாதிபதி கலந்துரையாட வேண்டும்



வடக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வட மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களை கலந்துரையாடலுக்கு அழைத்துள்ளதைப்போல், மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்க்க மலையக எம்.பிகளையும் கலந்துரையாடலுக்கு அழைக்க வேண்டுமென நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்திய வம்சாவளி மக்கள் இலங்கைக்கு வந்து அடுத்த ஆண்டுடன் 200 வருடங்களாகின்றன. எனினும், 200 வருடங்கள் கடந்தும் தற்போதும் லயன் அறைகளிலேயே வாழ்கிறார்கள். பொதுவான மலசலக்கூடம் இல்லாமை, பாடசாலைக்கு செல்வதில் உள்ள தூரம் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு மலையக மக்கள் தொடர்ந்து முகங்கொடுக்கிறார்கள். பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கு தோட்ட நிர்வாகத்தினரின் அனுமதியைப் பெற வேண்டியுள்ளது. இதில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

வடக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வடமாகாண பாராளுமன்ற உறுப்பினர்களை கலந்துரையாடலுக்கு ஜனாதிபதி அழைத்துள்ளார். வடக்குக்கு மாத்திரம் பிரச்சினை இல்லை. கிழக்கு மாகாணத்திலும் பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஜனாதிபதி கலந்துரையாடலுக்கு அழைக்க வேண்டும். எனினும் அதனை செய்யாது ஜனாதிபதி வட மாகாண எம்.பிகளை மாத்திரம் அழைப்பது வடக்கு கிழக்கைப் பிரிக்கவா, கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்த் தேசியத்தை அழிக்கவா எனவும் கேள்வி எழுகிறது. மலையகத்திலும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே மலையக பாராளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்து கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.


ரணில், மஹிந்த, மைத்திரியின்

# சொத்து விபரங்களை வெளிப்படுத்த வேண்டும்



தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தங்களது சொத்து விபரங்களை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன சபையில் கோரிக்கை விடுத்தார்.

இலஞ்ச, ஊழலை நாட்டில் ஒழிப்பது என்பது நடைமுறையில் சாத்தியமில்லை என வரவு செலவு திட்ட உரையில் ஜனாதிபதி ரணில விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார். இதனை ஏன் செய்ய முடியாது, நாட்டிலும் பாராளுமன்றத்திலும் திருடர்கள் இருப்பதாக கூறியே இளைஞர்கள் வீதிக்கு இறங்கினார்கள் எனவும் தெரிவித்தார். ஜனாதிபதியின் இந்த கருத்து தவறானது. ஏன் ஊழலை ஒழிக்க முடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏன் தனது சொத்துகள் தொடர்பான அறிவிப்பை வெளியிட முடியாது. சபையில் அமர்ந்துள்ள முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு ஏன் சொத்து விபரங்களை வெளிப்படுத்த முடியாது எனவும் கேள்வி எழுப்பினார்.



# கொரிய விசேட தூதுக்குழுவினர் சபாநாயகரைச் சந்தித்தனர்.

கொரிய குடியரசின் வெளிவிவகார அமைச்சின் விசேட தூதுவர் ஹன் டொங்மன் தலைமையிலான குழுவினர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நேற்று முன்தினம் (15) பாராளுமன்றத்தில் சந்தித்தனர். தென் கொரிய பாராளுமன்ற தேசிய சபையின் சபாநாயகர் பார்க் பியோங் சியொக் (Park Byeong-Seug) அவர்களின் வருகையின் போது வழங்கிய வரவேற்று மற்றும் உபசாரம் தொடர்பில் சபாநாயகருக்கு நன்றி தெரிவித்த ஹன் டொங்மன், 2023ஆம் ஆண்டு தென்கொரியாவுக்கு விஜயம் செய்யுமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு அழைப்பு விடுத்தார்.

அவர்களுக்கிடையில் இடம்பெற்ற சுமுகமான கலந்துரையாடலில் பரஸ்பர நலன்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன், இலத்திரனியல் கார்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களை ஊக்குவிக்கும் அரசாங்கத்தின் கொள்கையின் நோக்கத்தை பாராளுமன்ற சபாநாயகர் வெளிப்படுத்தினார். புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறைகளை நோக்கி உலகம் செல்கின்றது என்பதை ஏற்றுக் கொண்ட ஹன் டொங்மன், எதிர்காலத்தில் இதற்கான வாய்ப்புக்கள் குறித்து இரு நாடுகளும் கவனம் செலுத்த முடியும் என்றார். வேலைவாய்ப்புக்காக தென்கொரியாவுக்குச் செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது மற்றும் எதிர்கால முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

# கலவரத்துக்கு அழைப்பு விடுக்கிறது அரசாங்கம்

நாட்டு மக்களுக்கு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அரசாங்கம் கசப்பு மருந்தைத் தந்துள்ளது. இதனால் அரசாங்கம் நாட்டில் கலவரத்தை ஏற்படுத்த அழைப்பு விடுத்துள்ளது என சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். சிகரட்டுக்கு 5 ரூபாய் வரியை அதிகரிக்க வேண்டுமென நாம் கோரிக்கை விடுத்த நிலையில், பீடிக்கு 2 ரூபாய் வரியை ஜனாதிபதி அதிகரித்துள்ளார். இதனால் வறுமையில் உள்ளவர்களுக்கே பாதிப்பு எனவும் தெரிவித்தார்.

பொதுமக்கள் கட்டாயம் வரியை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் செல்வந்தர்களுக்கு அவ்வாறில்லை. அவர்கள் வரியை செலுத்தவில்லை என்றால் வரி விலக்கு வழங்குவார்கள். இதுவே 16 தடவைகள் நாட்டில்



இடம்பெற்றுள்ளது. கம்பனிகாரர்கள், பாரிய நிறுவனங்கள் வரியை செலுத்துவதில்லை. பின்னர் அவர்களுக்கு வரி விலக்கு வழங்கப்பட்டுவிடுகிறது. இதனால், நாட்டின் சாதாரண பொதுமக்களுக்கே பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. செல்வந்தர்களுக்கும் பாரிய நிறுவனங்களுக்கும் வரி விலக்கு அளிக்கப்படுவதால் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

# பாராளுமன்ற விசேட குழுவுக்கான பெயர்கள்

இலங்கையின் வணிக தொழில்முயற்சிகளை இலகுபடுத்தும் சுட்டெண்ணின் பெறுமானத்தை அதிகரிப்பது தொடர்பில் எழுந்துள்ள நடைமுறைச் சிக்கல்களையும் சிரமங்களையும் ஆய்வுசெய்வதற்கும் அது தொடர்பில் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவில் பணியாற்றுவதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (16) சபையில் அறிவித்தார்.

இந்த பாராளுமன்ற விசேட குழுவின் தலைவராகப் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி மதுர விதானகே பணியாற்றவுள்ளார். அத்துடன் இக்குழுவின் உறுப்பினர்களாக நஸீர் அஹமட், அ. அரவிந்த் குமார், சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா, தருமலிங்கம் சித்தார்தன், மொஹமட் முஸம்மில், சமிந்த விஜேசிறி, வருண லியனகே, சஞ்ஜீவ எதிரிமான்ன, நாலக பண்டார கோட்டேகொட,திருமதி கோகிலா குணவர்தன, லலித் வர்ண குமார ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதிகூடிய கவனத்தை

# தேயிலைத் தொழிற்துறை மீது செலுத்த வேண்டும்

தேயிலைத் தொழிற்துறையின் ஊடாக நாட்டுக்கு தேவையான அந்நிய செலாவணியைப் பெற்றுக்கொள்ளவும், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளவும் முடியும் என தெரிவிக்கும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, அதனால், இதுவரையில் வழங்கப்படாத அதிகூடிய கவனத்தை தேயிலைத் தொழிற்துறைக்கு செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (16) அமர்வில் கலந்துகொண்டு 22/7 கீழ் வினாக்களை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் தேயிலை துறை முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. இரசாயண உரம் மீதான தடையே இதற்குப் பிரதான காரணம். இதனால் தேயிலை உற்பத்தி பூஜ்ஜியத்தை அடைந்துள்ளது. தேயிலை துறையை நம்பி 25 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். 60 சதவீதமான சிறுதோட்ட உடைமையாளர்கள் உள்ளனர். இவர்களில் 75 சதவீதமானவர்கள் தேசிய தேயிலை உற்பத்திக்குப் பங்களிப்பு செய்கின்றனர் எனவும் கூறினார்.

அதேபோல், பெருந்தோட்ட நிறுவனங்களும் தேசிய உற்பத்திக்கு 29 சதவீதமான பங்களிப்பை வழங்குகிறார்கள். தேயிலை உற்பத்திக்கு தேவையான இரசாயண உரங்களுக்கு நாட்டில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடுகளால் மீள் பயிரிடல் பாதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அரசாங்கம் எடுக்கப்போகும் நடவடிக்கை என்னவென்றும் கேள்வி எழுப்பினார். இரசாயண உரம் மீதான தடையால் 60 சதவீதமான தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் தேயிலையை நம்பியுள்ளவர்களின் வருமானமும் வீழ்ச்சியடைந்துள்ளது. தடைக்கு முன்னர் வெறும் 1500 ரூபாயாக இருந்த உரம் தற்போது 15 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. அதேபோல் , ஒரு ஹேக்டெயருக்கு 150 கிலோ உரம் தேவைப்படுகிறது. ஆனால் வெறும் 50 கிலோ உரமே வழங்கப்படுகிறது. இது அசாதாரணமானது எனவும் தெரிவித்தார்.



மீள் பயிரிடல் மேற்கொள்ளப்படாத பாரிய இடங்கள் பெருந்தோட்ட நிறுவனங்களிடம் காணப்படுகின்றன. அவற்றை உடனடியாக சிறுதோட்ட உடைமையாளர்களுக்கு வழங்கி அவற்றில் மீள் பயிரிடல்களை மேற்கொள்ள வேண்டும் எனவும், அந்நிய செலாவணியை பெற்றுக்கொடுக்கவும், பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கும் தேயிலைத் தொழிற்துறைக்கு பயன்படுத்த முடியும். எனவே அரசாங்கம் இதுவரையில் வழங்காத அதி முக்கியத்துவத்தை தேயிலைத் தொழிற்துறைக்கு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

சைகை மொழியைப் பயன்படுத்தும்

# விசேட தேவையுடையோருக்கு தேசிய பட்டியல் கோரிக்கை

■ கே.எல்.ரி யுதாஜித்

சைகை மொழியைப் பயன்படுத்தும் செவிப்புலனற்ற, வாய்பேசமுடியாத விசேட தேவையுடையோருக்கு, பாராளுமன்ற தேசிய பட்டியல் உறுப்புரிமை வழங்கப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜீ. புஞ்சிஹேவாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்ட மறுசீரமைப்புகள் தொடர்பாக, விசேட பாராளுமன்ற தெரிவுக்குழுவால், பாராளுமன்றத்துக்கு முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் நோக்கத்துடன் மாவட்ட ரீதியாக, சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, கருத்துகளைப் பெற்றுக் கொள்ளும் நிகழ்வு, தேர்தல்கள் ஆணைக்குழுவால் நாடு பூராவும் இடம்பெற்று வருகின்றது.

இதனடிப்படையில் மட்டக்களப்பில் துறைசார்ந்தோரிடமிருந்து கருத்துகள், ஆலோசனைகள், பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளும் கலந்துரையாடல் அன்மையில் நடத்தப்பட்டது. இதன்போதே, சைகை மொழியைப் பயன்படுத்தும் செவிப்புலனற்ற விசேட தேவையுடையோரால் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

நாட்டில் சைகை மொழியைப் பயன்படுத்தும் விசேட தேவையுடையவர்கள் கணிசமானவர்கள் உள்ளனர். இவர்களின் தேவைகளையும் உரிமைகளையும் பெற்றுக் கொள்ளவென பாராளுமன்றத்தில் உறுப்புரிமை ஒன்று தேவைப்படுகின்றது. இதற்காக எதிர்வரும் பாராளுமன்றத்தில் தேசிய பட்டியலினூடாக உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என இலங்கை வாழ் செவிப்புலனற்றோர் சார்பாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



தகைசார் பேராசிரியர் சி. பத்மநாதன் எழுதிய

## ‘திருக்கோணேஸ்வரம்’ நூல் அறிமுக விழா

■ அ. அச்சுதன்

திருகோணேஸ்வரம் ஆலய பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில், செவ்வாய்க் கிழமை (15) திருகோணமலை நகரசபை பொது நூலகத்தில், யாழ்ப்பாண பல்கலைக்கழக வேந்தர் தகைசார் பேராசிரியர் சி. பத்மநாதன் எழுதிய ‘திருக்கோணேஸ்வரம்’ நூலின் அறிமுக விழா, திருகோணேஸ்வர ஆலய பரிபாலனசபைத் தலைவர் துஸ்யந்தன் தலைமையில் நடைபெற்றது. ஊடகவியலாளரும் ஓய்வுபெற்ற அதிபருமான திருமலை நவம் நூலின் அறிமுக உரை நிகழ்த்த, நூல் தொடர்பான கருத்துரைகளை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை மேனாள் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா, வரலாற்றுத்துறை மேனாள் பேராசிரியர் ப. புஸ்பரெட்ணம் ஆகியோர் நிகழ்த்தினர்.

அகிம்சா சமூக நிறுவனத்தின் 50ஆவது வீடு

## பலாச்சோலை கிராமத்தில் வழங்கிவைப்பு



■ க. விஜயரெத்தினம்

அகிம்சா சமூக நிறுவனத்தின் முயற்சியில் 50ஆவது வீடு, செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட களுவன்கேணி, பலாச்சோலை கிராமத்தில், மிகவும் வறிய குடும்பத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

அகிம்சா சமூக நிறுவனத்தின் தலைவர் வி. விஜயராஜாவின் முயற்சியால், கனடாவில் வசிக்கும் ஐயப்பன் பக்தர்களின் நிதிப் பங்களிப்பில், ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலகத்தின் அனுமதியுடன் குறித்த வீடு, ஒன்பது இலட்சம் ரூபாய் பெறுமதியில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த வீட்டை உத்தியோக பூர்வமாக, வீட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வு, நேற்று (16) நடைபெற்றது. இந்நிகழ்வில் செங்கலடி பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் கே. கருணாகரனும், அமிம்சா சமூக நிறுவனத்தின் நிறைவேற்றுச் செயலாளர் இ. ராஜ்மோகன் உள்ளிட்டவர்களுடன் கிராம மக்களும் கலந்துகொண்டார்கள்.

## ஆழ்கடலில் எரிவாயு கசிவால் மீனவர் படுகாயம்

■ எச்.எம்.எம் பர்ஸான்

ஆழ்கடலுக்கு இயந்திரப் படகில் மீன்பிடிக்க சென்ற ஓட்டமாவடி, மீராவோடை பகுதியைச் சேர்ந்த மீனவர், எரிகாயங்களுடன் நேற்று முன்தினம் (15) வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இயந்திரப் படகிலிருந்த எரிவாயு சிலிண்டரில் உணவு சமைத்துக் கொண்டிருந்த போது, எரிவாயு கசிவு ஏற்பட்டு மீனவர் மீது தீபற்றியதாக அவருடன் சென்ற மீனவர்கள் தெரிவித்தனர்.

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த ஏனைய மீனவர்கள், தீபற்றிய மீனவரை வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

## வைரஸ் காய்ச்சலுக்கு சம்மாந்துறை மாணவி பலி

■ வி.ரி சகாதேவராஜா

சம்மாந்துறை அல்மர் ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் தரம் 7 இல் கல்விபயிலும் சம்மாந்துறையைச் சேர்ந்த 12 வயது மாணவி, வைரஸ் காய்ச்சலுக்கு நேற்று (16) பலியாகி உள்ளார். இதனால், பாடசாலை வெண் கொடியுடன் சோகமயமாக காட்சியளித்தது. இம் மரணத்தை அடுத்து, பாடசாலை மாணவர்களிடையே ஒருவித அச்சம் எழுந்துள்ளது.

நேற்று முன்தினம் (15) இரவு அவர், கல்முனை அஷ்ரப் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது ஜனாசா நேற்று (16) சம்மாந்துறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

வைரஸ் காய்ச்சல் காரணமாக ஏற்பட்ட மரணம் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. மாரி மழையை அடுத்து, கல்முனை பிராந்தியத்தில் குறிப்பாக சம்மாந்துறை பகுதியில், டெங்கு நோய்க்கான அறிகுறிகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சம்மாந்துறை தாருஸலாம் மகா வித்யாலயத்தில் கல்வி சாரா ஊழியராக கடமை புரியும் அர்சுத்தின் என்பவரும் நேற்று (16) காலமானார். இதனால் பாடசாலையில் வெள்ளைக்கொடி கட்டப்பட்டுள்ளது.

ஏழை மாணவிக்கு உணவு வழங்கிய

## முன்மாதிரியான செயலுக்கு கௌரவம்

### தரம் 05 மாணவியின் மனிதாபிமான செயல்

■ எம்.எஸ்.எம் ஸாகிர்

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர் ஒருவருக்கு தினந்தோறும் உணவு கொண்டு வந்து, வழங்கி வருகின்ற முன்மாதிரி மிக்க மனிதாபிமான செயலைச் செய்துவரும் தரம் 5 இல் கல்வி பயிலும் மாணவி ஜே. எப் இப்லாவின் நற்செயல், பாராட்டப்பட்டது.

இம் மாணவியின் சிறப்பான மனிதாபிமான முயற்சியைப் பாராட்டி, கௌரவிக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு, நேற்று (16) சாய்ந்தமருது அல்-ஹிலால் பாடசாலையில் நடைபெற்றது. இதன்போது, அதிபர் யூ.எல் நசார், அதிதியாகக் கலந்துகொண்ட பொறியியலாளர் எம்.சீ கமால் நிஸாத் மற்றும் ஆசிரியர்களால் மாணவி ஜே. எப் இப்லா பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவ்வுணவை தினந்தோறும் வழங்குவதற்கு உறுதுணையாக இருந்த அவரது பெற்றோரும் இதன்போது பாராட்டப்பட்டனர்.



# “அண்ணாவும் நானும் ஏமாற்றப்பட்டு கொண்டிருக்கின்றோம்”

### அரசியல் கைதி வி. பார்த்திபனின் சகோதரி வாஹினி உருக்கமான கோரிக்கை

■ நிதர்சன் வினோத்



தமிழ் அரசியல் கைதியாக, 27 வருடங்களாக சிறையில் இருக்கும் தனது சகோதரனை விடுவிக்க வேண்டும் என, அரசியல் கைதி விக்னேஸ்வரநாதன் பார்த்தீபனின் சகோதரி வாஹினி உருக்கமான கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் செவ்வாய்க்கிழமை (15) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இக்கோரிக்கையை முன்வைத்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எங்கள் அண்ணாவும் நானும் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். நீண்ட காலமாக விடுதலை விடுதலை எனக்கூறி, அந்த விடுதலை கிடைக்கவில்லை. அண்ணா 18 வயதில் சிறை சென்று இன்று 46 வயதாகிவிட்டது. அண்ணாவின் விடுதலையை எதிர்பார்த்து அம்மா உயிரிழந்துவிட்டார்.

அண்ணாவின் வாழ்க்கை சிறையில் முடிந்துவிடாமல் அவரை பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

குறித்த ஊடக சந்திப்பில், அண்மையில் விடுதலையான வேலாயுதம் வரதராஜன் கருத்து தெரிவிக்கையில், 23 வருட சிறைவாசத்தை அனுபவித்துவிட்டு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை பெற்று வந்துள்ளேன்.

நீண்ட காலம் சிறையிலிருந்து வரும் கைதிகள், மிகவும் பின் தங்கிய பூச்சிய நிலையிலேயே இருக்கின்றார்கள். அதனால், விடுதலை பெற்று வந்தவர்கள் சமூகத்தில் வாழ்வை ஆரம்பித்து முன்கொண்டு செல்வதற்கு, நமது சமூகத்தில் அக்கறை கொண்ட அமைப்புகள் உதவி செய்ய வேண்டும். அத்துடன், அண்மையில் விடுவிக்கப்பட எட்டு அரசியல் கைதிகளுக்கும் அமைப்பொன்றால் உதவித்தொகை வழங்கப்பட்டது. அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

அதேவேளை, குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு. கோமகன் கருத்து தெரிவிக்கையில், தமிழ் அரசியல் கைதிகள் 33 பேர் சிறையில் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களையும் விரைந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## யாழில் 61 வர்த்தகர்ளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை



■ என். ராஜ்

யாழ்ப்பாண மாவட்டத்தில், ஒக்ரோபர் மாதத்தில் 61 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பொறுப்பதிகாரி விஜிதரன் தெரிவித்தார். ஒக்டோபர் மாதத்தில் 61 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, 14 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் பணம் வர்த்தகர்களிடம் தண்டப் பணமாக அறவிடப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்

முக்கியமாக, பொருட்களுக்கான விலையை காட்சிப்படுத்தாமை, கட்டுப்பாட்டு விலையை மீறி பொருட்களை விற்றமை, நிறை குறைவாக பாண் விற்பனை செய்தமை போன்ற குற்றச்சாட்டுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது என விஜிதரன் தெரிவித்தனர்.

வட்டுவாகல் கடற்படை தளத்துக்கான

## காணி சுவீகரிப்புக்கு மக்கள் எதிர்ப்பு



■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு, வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள ‘கோட்டாபய கடற்படை கப்பல்’ கடற்படை முகாமுக்காக 617 ஏக்கர் காணியை சுவீகரிப்பதற்கான நில அளவீடு நேற்று (16) முன்னெடுப்பதை அறிந்த காணி உரிமையாளர்கள், கடற்படை முகாமுக்கு முன்னால் ஒன்றுகூடி, எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.

வட்டுவாகல் பகுதியில் மக்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் நிலங்களை, 13 வருடங்களாக கடற்படை ஆக்கிரமித்து, பாரிய முகாமை அமைத்துள்ளதுடன் குறித்த காணிகளை, நிரந்தரமாக சுவீகரிக்கும் பொருட்டு, பலதடவைகள் நில அளவீடு செய்ய எடுத்த முயற்சிகள், மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டிருந்தது.

2017ஆண்டு ஒகஸ்ட் மாதம் நான்காம் திகதி வெளியாகிய வர்த்தமானியில், குறித்த காணி கையகப்படுத்தப்பட்டுள்ளது என பிரசுரமாகியுள்ளதோடு, காணி உரிமையாளர்கள் காணி ஆவணங்களோடு வருகைதந்து, கடற்படை முகாமுக்கு காணியை வழங்க, எல்லைகளை அடையாளம் காட்டுமாறு, பல தடவைகள் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

மக்களின் தொடர்ச்சியான எதிர்ப்பு போராட்டங்கள் காரணமாக, அளவீட்டு பணிகள் இடம்பெறவில்லை. இந்த நிலையில், நேற்று சிறப்பு நில அளவையாளர் குழு கொழும்பிலிருந்து வருகைதந்துள்ளதாக அறிந்த காணி உரிமையாளர்கள், அரசாங்கத்துக்கு காணியை வழங்குவதற்கு எதிர்பைத் தெரிவித்துள்ளார்கள்.

“தமிழர்களின் நிலங்களை பறிக்கின்றார்கள்; ஆலயங்களை பறிக்கின்றார்கள். இது இன்னும் இனப்பிரச்சினையை சிக்கலாக்கும். மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் என, போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவித்தார்கள்.

## காணி சுவீகரிப்புக்கு எதிராகப் போராட்டம்



■ நிதர்சன் வினோத்

முப்படைகளின் தேவைக்கு காணி சுவீகரிப்பு தொடர்பான கூட்டம், வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, நேற்று முன்தினம் (15) வட மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தில், ‘எமது நிலம் எமக்கு வேண்டும்’, ‘தமிழ் அதிகாரிகளே ஆளுநர் பதவிக்கு துணைபோகாதீர்கள்’, ‘தமிழர்களின் நிலங்களை அபகரிக்காதே, ‘ஐ.எம். எப் பெறுவதற்கான நாடகம்’, ‘வடக்கும்கிழக்கும் தமிழர் தாயகம்’ போன்ற பதாகைகளை போராட்டக்காரர் ஏந்தியிருந்தனர் . தமிழரின் காணிகள் சுவீகரிப்பு தொடர்பில், பிரதேச செயலாளர்களுடன் ஆளுநர் நடத்தவுள்ள கூட்டம், நேற்று முன்தினம் மதியம் ஆளுநர் செயலகத்தில் இடம்பெறவிருந்த நிலையில், அதைத் தடுக்கும் வகையில் இப் போராட்டம் முன்னேடுக்கப்பட்டது.

## தெல்லிப்பளையில் நியூசிலாந்து தூதுவருடன் கலந்துரையாடல்

■ ஆர். நடராஜன் ஹரன்

இலங்கைக்கான நியூசிலாந்தின் உயர்ஸ்தானிகர் மைக்கேல் அப்பிள்டனுக்கும் தந்தை செல்வா நினைவு அறக்கட்டளையின் தலைமை அறங்காவலர் சட்டத்தரணி சா.செ.ச இளங்கோவன் தலைமையிலான குழுவினருக்கும் இடையே சந்திப்பு அண்மையில் தெல்லிப்பளை தந்தை செல்வா இல்லத்தில் நடைபெற்றது.

வட மாகாணத்தின் களநிலைவரம், மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதுடன், எதிர்காலத்தில் வடமாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பாக, நியூசிலாந்து உற்பத்திகளை களஞ்சியப்படுத்தும் தொழில்நுட்ப பரிமாற்றம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது

இந்நிகழ்வில், அறங்காவலர்கள் நா. வேதநாயகன், கிருஷ்ணா நந்தன், ஆலோசகர்கள் நாகேந்திரன், கமலகாந்தன் அறக்கட்டளையின் இணைப்பாளர் டிலோகினி ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







நீர் வளம் இருந்தும் ‘சென்கிளயரில்’

# நீரின்றி அவதி

■ செ.தி.பெருமாள்

மலையக மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்கிக் கொண்டிருக்கும் நுவரெலியா வலய கல்வி வலயத்துக்கு உட்பட்ட சென்கிளயர் தமிழ் மஹா வித்தியாலயத்தில், பல வருடங்களாக மாணவர்கள் குடிநீர் இன்றி அவதியுறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பாடசாலையில் சுமார் 600க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்வதுடன், 25க்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் கடமையாற்றுகின்றனர்.

இந்த நிலையில், இந்தப் பாடசாலையின் குடிநீர் பிரச்சினை தொடர்பில், மலையக அரசியல் தலைவர்களிடம் பலமுறை கொண்டு சென்றும், கண்டு கொள்ளாமல் இருப்பது மிகுந்த வேதனை அளிப்பதாக ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அபிவிருத்தி சங்கத்தினரும் தெரிவிக்கின்றனர் .

இப்பாடசாலையானது கொட்டகலை பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பாடசாலை என்பதால், குடிநீர் பிரச்சினை தொடர்பில் கொட்டகலை பிரதேச சபை கவனம் செலுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றனர்.

## ஹட்டனில் இன்று நடமாடும் சேவை

■ சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன் பிரதேச மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முகமாக அம்பகமுவ பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவை இன்று (17) காலை 9 மணி முதல் ஹட்டன் டி.கே. வீரதுங்க கலாசார மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஹட்டன் வடக்கு கிராம உத்தியோகத்தர் எஸ். சுரேஷ் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், பிறப்பு, திருமண, இறப்பு ஆகிய சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை என்பவற்றை ஒரே நாளில் வழங்குதல், குழந்தைகள் தொடர்பான பிரச்சினைகள், பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்தல், பதிவு செய்யப்படாத திருமணங்களைப் பதிவு செய்தல் உள்ளிட்ட சேவைகள் இங்கு முன்னெடுக்கப்படவுள்ளன என்றார்.

பொலிஸ் சான்றிதழ்களைப் பெறுதல், குடும்ப ஆலோசனை சேவைகள், EPF மற்றும் ETF சேவைகள் போன்றவற்றின் பிரச்சினைகளுக்கு இந்த நடமாடும் சேவை மூலம் தீர்வுகளை பெற முடியும் என்றார்.

ஹட்டன், மேற்கு, வடக்கு, தெற்கு, கிழக்கு, ருவன்புர கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இந்த நடமாடும் சேவையின் மூலம் நன்மைகளைப் பெற முடியும் என அவர் தெரிவித்தார்.

## ‘சுத்தம் செய்வோம்; சூழலை பாதுகாப்போம்’

■ துவாரகஷான்

அக்கரப்பத்தனை நகரத்திலுள்ள தமிழ் மற்றும் சிங்கள பாடசாலைகளுக்கு செல்லும் வீதிகளில் நேற்று முன்தினம் (15) சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

‘நகரத்தைச் சுத்தம் செய்வோம்; சூழலைப் பாதுகாப்போம்’ என்ற தொனிப்பொருளின் கீழ், இந்தச் சிரமதானப் பணிகள் முன்னெக்கப்பட்டன.

இந்தச் சிரமதானப் பணிகளில், அக்கரப்பத்தனை பிரதேச சபையினர், பொலிஸார், நகர வர்த்தகர்கள், சாரதிகள், பாடசாலை மாணவர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், தோட்ட அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

அக்கரப்பத்தனை பிரதேச சபை தவிசாளர் இராமன் கோபாலகிருஷ்ணனின் வழிகாட்டுதலுக்கு அமைவாகவும், நகர வர்த்தக சங்க உறுப்பினர்களின் பங்களிப்புடனும் சிரமதானம் நடைபெற்றது.

இதன்போது வீதிகளின் இரு



மருங்கிலும் வீசப்பட்டு கிடந்த பிளாஸ்டிக் போத்தல்கள், பொலித்தீன்கள் அப்புறப்படுத்தப்பட்டதுடன், டெங்கு தொடர்பான விழிப்புணர்வும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை பிளாஸ்டிக் பாவனையின் பாதிப்பு குறித்த துண்டுபிரசுரமும் பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மரக்கன்றுகள் வழங்கப்பட்டன

■ செ.தி. பெருமாள்

மஸ்கெலியா பிரதேச சபை தவிசாளர் கோவிந்தன் செம்பவள்ளியின் வேண்டுகோளுக்கிணங்க, மஸ்கெலியா பிரதேச பாடசாலைகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, மஸ்கெலியா பிரதேச சபையின் பொது நூலகம், சாமிமலை பொதுநூலகம் என்பன இணைந்து




நடத்திய ‘பசுமை நூலகம்’ என்ற தலைப்பில் பாடசாலைகளுக்கு இந்த மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு புளூம்பீல்ட் தமிழ் மஹா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதேச சபையின் தவிசாளர் கோவிந்தன் செம்பவள்ளி, அதிபர் எஸ்.பி பரமேஸ்வரன், ஆசிரியர்கள், மாணவர்களும் கலந்து கொண்டனர்.

## துப்பாக்கிச் சூட்டில் மங்கள மரணம்

■ ஷேன் செனவிரத்ன

தெல்தெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திகனை நகரில் பெரும்தொகை பணத்தை வட்டிக்கு வழங்கும் நிறுவனத்தை நடத்திச் சென்ற நபர் ஒருவர், நேற்று (16) பகல் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில் பலியாகியுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான 55 வயதான தொன் ரங்கஜீவ மங்கள குணவர்தனவே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர், வட்டிக்கு பெருந்தொகை பணம் வட்டிக்கு கொடுக்கும் தொழிலுடன் மேலதிகமாக வாகனங்களை வாடகைக்கு விடும் வர்த்தகத்திலும் ஈடுபட்டிருந்தார். அத்துடன் பல முகவர் நிலையங்களையும் நடத்திச் சென்றவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. திகனை நகரிலுள்ள பல கட்டடங்கள் இவருக்குச் சொந்தமானவை ஆகும்.

உயிரிழந்த நபருக்கு அருகிலிருந்து துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டு உள்ளதுடன், இது தற்கொலையா அல்லது எவரேனும் துப்பாக்கிச் சூடு நடத்தினரா என்பது தொடர்பில் தெல்தெனிய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



## உலருணவுப் பொருட்கள்...





பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள சாந்திபுர- பண்டுர பிரதேசத்தில் 200 வறிய குடும்பங்களை தெரிவு செய்து, இலங்கை இராணுவத்தின் சிங்க படையணியின் நுவரெலியா கிளை, உலருணவு பொதிகளை வழங்கியது.

(எஸ்.கே குமார்)

நல்லதண்ணியிலுள்ள

## மலசலகூட தொகுதி நவீனமயமாகும்

■ செ.தி.பெருமாள்



சிவனொளிபாதமலை யாத்திரிகர்களின் நலன் கருதி, நல்லதண்ணி நகரில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள மலசலகூட தொகுதிகள் நவீனமயப்படுத்தப்படவுள்ளன.

மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளர் கோவிந்தன் செம்பவள்ளியின் வேண்டுகோளுக்கிணங்க, மத்திய மாகாண ஆளுநரின் ஆலோசனைக்கு அமைய, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பான முதற்கட்ட கலந்துரையாடலும் களவிஜயமும் நேற்று (16) முன்னெடுக்கப்பட்டது.

இந்த விஜயத்தின் போது தவிசாளருடன் ஜப்பானின் Dulki Axis Environment (pvt) Ltd நிறுவனத்தின் இயக்குநர் றுய் ஒவ்ஸி மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்ட முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அகில இலங்கை சிவத்தொண்டர் பேரவை

### கண்டியில் அங்குரார்ப்பணம்

■ எஸ்.கணேசன்

வரலாற்று சிறப்புமிக்க கண்டி மெதமஹாநுவர முருகாமலை ஸ்ரீ முருகன் தேவஸ்தானத்தில் அகில இலங்கை சிவத்தொண்டர் பேரவை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அகில உலக சைவத் தமிழ் ஒன்றியத்தின் தலைவர் இளங்கோ நவரத்தினத்தின் தலைமையில், முருகாமலை தேவஸ்தானத்தின் அறங்காவலர் பெ. செல்லையாவின் ஏற்பாட்டில் இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் உள்ள சிவ தொண்டர்களின் பங்குப்பற்றலில் இந்த அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது.

இந் நிகழ்வு தொடர்பாக கருத்து தெரிவித்த, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் பிரஜா சக்தி செயற்றிட்டத்தின் பணிப்பாளர் பாரத் அருள்சாமி “சைவ நீதியின் வளர்ச்சிக்காக அனைவரும் ஒன்றிணைவது காலத்தின் தேவையாகும். அந்த வகையில் சிவ தொண்டை மேற்கொள்ள வாய்ப்பு கிடைத்தது எனது பெரும் பாக்கியம் ஆகும். எல்லாவற்றிற்கும் மூலவரான சிவனின் அருளால் நாம் அனைவரும் ஒன்றிணைந்து மக்களிடையே நல்லிணக்கத்தையும் பக்தியின் மகிமையையும் முக்திக்கான தேடலையும் மேற்கொள்ள முன்னின்று செயற்படுவோம் எனத் தெரிவித்தார்.

மேலும், இந்நிகழ்வின் முக்கிய அம்சமாக சிவனடியார்கள் பூஜித்து ஆராதனை செய்யக்கூடிய பத்து சிவலிங்கங்கள் இளங்கோ நவரத்தினத்தின் நிதியுதவியோடு விசேட யாக பூஜைகளுக்கு பின்னர் தெரிவு



செய்யப்பட்ட கோவில்களுக்கு முதல் கட்டமாக கையளிக்கப்பட்டன.

கண்டி மாவட்டத்திலும் நுவரெலிய மாவட்டத்திலும் கேகாலை மாவட்டத்திலும் அமைந்துள்ள சிவ தலங்களுக்கு அதன் நிர்வாக குழு உறுப்பினர்கள் வாயிலாக சிவலிங்கங்கள் கையளிக்கப்பட்டன.

## கொஞ்சம் கவனிக்கவும்!

■ சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன் பிரதான பஸ் தரிப்பிடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதுடன், மழையுடனான வானிலையின் போது, ஹட்டன் பிரதான பஸ் தரிப்பிடத்தில் அதிகம் நீர் தேங்கி நிற்பதாகவும் பஸ் தரிப்பிடத்தில் காணப்படும் பாரிய குழிகளிலேயே இவ்வாறு நீர் தேங்கி நிற்பதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

பல வருடங்காக பஸ் தரிப்பிடத்தில் இந்தக் குழிகள் காணப்படுவதாகவும் இதனால் மழைக்காலங்களில் மாணவர்கள் அதிகம் சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், பஸ்



தரிப்பிடத்தில் உள்ள வடிகான்களை முறையாக சுத்தம் செய்யாததால், இப்பகுதிகளில் கடும் துர்நாற்றம் வீசுவதுடன், நுளம்பு தொல்லையும் அதிகரித்துள்ளது.

மேலும், கடந்த ஓராண்டுக்கு முன்னர் தனியார் பஸ்கள் நிறுத்தப்படும் இடத்தில், மண் சரிந்து, வடிகானில் அடைப்பு ஏற்பட்டுள்ள நிலையில், இதுவரை மண் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்படாததால் மழைக் காலங்களில், வெள்ள நீர் பெருக்கெடுக்கின்றது. இதனால், கடும் சிரமம் ஏற்படுவதாகவும் சாரதிகளும் பயணிகளும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் ஹட்டன்- டிக்கோயா நகர சபையோ சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ கவனம் செலுத்த வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## இரத்தினபுரியில் ஒசுசல

■ சிவாணி ஸ்ரீ

இரத்தினபுரி மாவட்ட போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வரும் நோயாளர்களுக்கு, ஒசுசல மூலம் மருந்து வகைகளை பெற்று கொள்வதற்கு தேவையான நிதி வசதிகளை வழங்குவதற்கு வைத்தியசாலை நிர்வாக குழுவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இரத்தினபுரி மாவட்ட போதனா வைத்தியசாலையின் நிர்வாகக் குழு கூட்டம், சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் வைத்தியசாலையின் கட்டடத்தொகுதியில்



இடம்பெற்றபோதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் அபிவிருத்தி குழு தலைவர் டென்சில் லியனகே,

இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக்காக அமெரிக்கா நாட்டைச் சேர்ந்த லியனகே, சுபாஷ் கருணாரத்ன, பிரியந்த டி.சில்வா, புன்சிறி தென்னகோன் ஆகியோர் 10 கோடி ரூபாய் நிதியுதவியை தந்து உதவியுள்ளார். இந்நிலையில், இந்த வைத்தியசாலைக்கு வருகைத் தரும் வசதி குறைந்த நோயாயாளர்களுக்கு வைத்தியர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் தேவையான மருந்து வகைகளை பெறுவதற்கும் நிதியுதவி வழங்கப்படும் என்றார்.

## ஹெரோய்னுடன் சார்ஜன்ட் கைது

■ மஹேஸ் கீர்த்திரத்ன

2 மில்லி கிராம் ஹெரோய்னுடன் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் மாத்தளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை, களுதாவளை நரிகந்த பிரதேசத்தில் வைத்தே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கலேவல பகுதியைச் சேர்ந்த நாவுல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர் என்றும் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரை மாத்தளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஏழைகளின் சவால்கைளை உலகத் தலைவர்களிடம் எடுத்துரைத்த மோடி

உலக நாடுகளில், பொருளாதார தடைவிதிக்கப்பட்டுள்ள நாடுகளைத் தவிர, ஏனைய நாடுகள் ஒவ்வொன்றும் ஏதோவொரு வகையில் இதர நாடுகளில் தங்கியிருந்தே ஆகவேண்டும். சகல துறைகளிலும் தன்னிறைவடைந்த நாடு என்று ஒரு நாடும் இந்த உலகில் கிடையாது.

இந்நிலையில், உலக மக்கள் தொகையானது 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் திகதியுடன், எட்டு பில்லியனை எட்டியிருக்குமென ஐக்கிய நாடுகள் சபையால் கணிக்கப்பட்டுள்ளது. 2023ஆம் ஆண்டளவில் இந்தியாவின் மக்கள் தொகை சீனாவை விஞ்சி நிற்குமெனவும் கணிக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகள் மிகவும் நெருக்கடியான நிலைமையை முகங்கொடுத்துக்கொண்டிருக்கும் இத்தருணத்தில், இந்தோனேஷியாவில் ஜி-20 உச்சி மாநாடு நடைபெற்றது. அதில், உணவு, எரிசக்தி பாதுகாப்பு குறித்த கூட்டத்தில், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, உலகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலான பல கோரிக்கைகளை, உலகத் தலைவர்களின் முன்னால் வைத்துள்ளார்.

அதில், உக்ரேனில் இடம்பெறும், யுத்தத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டுவரவேண்டுமென வலியுறுத்தியுள்ளார். கொரோனாவுக்குப் பின்னர் தலையைத் தூக்கிவிடலாம் என நினைத்த பல நாடுகள், உக்ரேன்- ரஷ்ய யுத்தத்தில் துவண்டு விழுந்துவிட்டன.

இறக்குமதியில் மட்டுமன்றி ஏற்றுமதித்துறையிலும் பல சவால்களை எதிர்கொண்டது மட்டுமல்லாமல், புதிய உலக சந்தைகளைத் தேடவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது. எரிபொருளை இறக்குமதிச் செய்வதில் கடுமையான சிக்கல்களுக்கு நாடுகள் முகங்கொடுத்தன. இதைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட ஏனைய சந்தைகள், 'கிடுகிடு'வென விலைகளை அதிகரித்தன. இதனால், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் திக்குமுக்காடின.

இதனால்தான், முழுமையான எரிசக்தி மாற்றத்துக்கு, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்குத் தேவையான நிதி, தொழில்நுட்பத்தை சரியான நேரத்தில் வழங்குவது அவசியமென மோடி வலியுறுத்தியுள்ளார்.

"உலகம் முழுவதும் அத்தியாவசியப் பொருட்களுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் ஏழைகள் கடும் சவால்களை சந்திக்கின்றனர். பாதிப்புகளை சமாளிக்கத் தேவையான நிதி, ஏழைகளிடம் இல்லை. இதுபோன்ற பிரச்சினைகளை ஐ.நா போன்ற அமைப்புகளால் தீர்க்க முடியவில்லை. அதனால், முக்கியத்துவம் வாய்ந்த ஜி-20 அமைப்பிடம் இருந்து, இன்றைய உலகம் அதிகம் எதிர்பார்க்கிறது" என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி சுட்டிக்காட்டி இருக்கிறார்.

இரண்டாம் உலகப் போருக்கு பிறகு, அப்போதைய தலைவர்கள் உலக அமைதிக்கு, அதிக முக்கியத்துவம் கொடுத்து, கணிசமான முயற்சிகளும் எடுத்தனர். அதை நாம் இப்போது செய்ய வேண்டும். உலகில் அமைதி, நல்லிணக்கம், பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான திடமான தீர்வை, நாம் காண வேண்டுமெனவும் பிரதமர் மோடி வலியுறுத்தினார்.

கொரோனாவுக்குப் பின்னர், உக்ரேன்-ரஷ்ய யுத்தம், உலகநாடுகளை ஆட்டங்காணச் செய்துவிட்டது. அதிலிருந்து மீண்டெழ வேண்டுமாயின் கட்டாயமாக அமைதியே முக்கியம். இந்திய பிரதமர் மோடியும் இதையே வலியுறுத்தியுள்ளார்.

ஒரு நாட்டில் அமைதியும், பாதுகாப்பும் இல்லையெனில் அந்நாட்டில் வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் எதிர்பார்க்கமுடியாது. அத்துடன், ஏனைய நாடுகளின் மீதும் அவை வெகுவான தாக்கத்தை செலுத்தும் என்பதை கவனத்தில் கொள்வதே காலத்தின் தேவையாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

போருக்குப் போகும் மாவீரர்கள் போல, எதையும் சிந்திக்காமல் சூடான வார்த்தைகளைத் தமக்குப் பிடிக்காதவர்களிடம் அள்ளிவீசுவதுண்டு.

கோபம், ஒருவரை எல்லை மீறும் உணர்வுக்குள் வசப்படுத்திவிடுகின்றது. சினம் ஏற்படுவது இயல்பானது. அதற்காகத் தன்னை மறந்து, தகாத வார்த்தைகளைப் பேசும்போது, அதைக் கேட்ட நபரும் அம்பு போல் பாய்கின்றார்.

ஒரு கணம் அமைதியாகச் சிந்தித்தால், சினம் அடங்கிவிடும். மனிதனை மனிதன் வெறுத்தல் தகாது. பிடிக்காதவரிடம் பேசாமல் ஒதுங்குவது நல்லது.

நியாயத்தை எவரும் நிராகரிக்கும் போது, இயல்பான கோபம் வருவதுண்டு. இதற்காகக் கெட்டவர்கள் எல்லோரிடமும் மோத முடியாது.

தவறான நடத்தை உள்ளவர்கள், அதன் பிரதிபலனை பெற்றே தீருவார்கள். குரோதம் ஒருபோதும் சந்தோசங்களை உணராது; அறிவைக் கெடுக்கும். பிறரின் தூற்றுதலுக்கும் ஆளாவார்கள்.

வாழும் காலம் பொன்னானது. எனவே, நல்ல வழியில் வாழ்ந்தால், அதுவே நிரந்தர நிம்மதியை அளிக்கும். சினம், நற்குணம் அறியாது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# வாழ்ந்து கெட்ட நிலையில் கூட்டமைப்பும் சம்பந்தனும்



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், அதன் தலைவர் இரா. சம்பந்தனும் வாழ்ந்து கெட்டவர்களின் நிலைக்கு வந்துவிட்டார்கள்.

அரசியல் தீர்வு தொடர்பில் பேச்சு நடத்துவதற்கான அழைப்பை, தமிழ்த் தேசிய கட்சிகளிடம் சம்பந்தன் அண்மையில் விடுத்திருந்தார். செவ்வாய்க்கிழமை (15) மாலை, அவரின் கொழும்பு வதிவிடத்துக்கு வருமாறு கட்சி தலைவர்களை அழைத்திருந்தார். ஆனால், அந்த அழைப்பை யாரும் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை; பேச்சுக்கு வரவும் இல்லை. குறிப்பாக, சம்பந்தன் தலைமை வகிக்கும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான டெலோ மற்றும் புளொட் ஆகியவற்றின் தலைவர்கள் கூட பேச்சுக்கு வரவில்லை.

சம்பந்தனின் பேச்சுக்கான அழைப்பை, கூட்டமைப்பின் பேச்சாளர் என்ற அடிப்படையில் விடுத்த எம்.ஏ சுமந்திரனும், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் மாத்திரமே பேச்சுக்கு வந்திருந்தார்கள்.

செவ்வாய்க்கிழமை காலையில் ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகளுடனான கூட்டமைப்பின் சந்திப்பில் கலந்து கொண்ட செல்வம் அடைக்கலநாதனும், தர்மலிங்கம் சித்தார்த்தனும் கூட பேச்சுக்கு வரவில்லை. குறிப்பாக, ஐ.நா பிரதிநிதிகளுடனான சந்திப்பின் பின்னர், அன்று மாலை நடைபெற இருக்கும் கலந்துரையாடல் பற்றி சம்பந்தன், செல்வத்திடம் நேரடியாகக் கூறி, அவரின் வருகையை உறுதிப்படுத்திக் கொண்டார். எனினும் சம்பந்தரிடம் நேரில் உறுதியளித்த செல்வம், மாலை பேச்சுக்கு வருவதைத் தவிர்த்துவிட்டார்.

இதனால், தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் இணைந்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைக்கு செல்வது என்ற விடயம், முளையிலேயே கிள்ளி எறியப்பட்டுவிட்டது. கூட்டமைப்புக்கு மாற்றாக தமிழ்த் தேசிய பரப்புக்குள் எழுந்த தமிழ்த் தேசிய முன்னணியோ, சி.வி விக்னேஸ்வரனின் கட்சியோ சம்பந்தனின் அழைப்பை புறக்கணிப்பதிலுள்ள அரசியலை புரிந்து கொள்வது இலகுவானது.

ஆனால், ஒரே கூட்டுக்குள் அதுவும் கடந்த காலங்களில் சம்பந்தன் கிழித்த கோட்டைத் தாண்டாத செல்வமும் சித்தார்த்தனும் கூட, பேச்சில் கலந்து கொள்ளவில்லை என்பது, வாழ்ந்து கெட்டவரின் நிலையை இலகுவாக எடுத்துக்காட்டப் போதுமானது.

கூட்டமைப்பு மீதான அபிமானம் என்பது, தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்படுத்திக் கொடுத்தது. கூட்டமைப்புக்கான விதை, தமிழ்க் கட்சிகளாலும் புலமையாளர்கள் சிலராலும் போடப்பட்டது. ஆனால், கூட்டமைப்பு எனும் விருட்சத்தின் தேவையை, புலிகள் உணர்ந்து கொண்டு அவர்கள்தான் வளர்த்தெடுத்தார்கள். அந்த விருட்சத்தின் கீழ், யார் யாரெல்லாம் இணைக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் புலிகள் குறிப்பிட்டளவான சுதந்திரத்தை அந்த முயற்சியில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கியிருந்தனர். அதனால்தான், கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இராணுவத்தின் ஒட்டுக்குழு போல செயற்பட்ட புளொட் அமைப்பை எல்லாம் அழைத்து பேசும் அளவுக்கான நிலை இருந்தது.

ஆனால், புலிகள் ஆளுமை செலுத்தும் கூட்டமைப்பில் இணைந்து செயற்பட முடியாது; அது இராணுவத்தினருக்கான தங்களின் விசுவாசத்தை கேள்விக்குள்ளாக்கும் என்ற நிலையில், புளொட் அப்போது அதில் அங்கம் வகிக்கவில்லை. மாறாக, கூட்டமைப்புக்கு எதிரான நிலையில் நின்று அரசியல் செய்தது.

இவ்வாறான விட்டுக்கொடுப்புகள், பழைய பகைகளை எல்லாம் மறந்து நின்றுதான் கூட்டமைப்பை தமிழ் மக்களின் அரசியல் சக்தியாக புலிகள் வளர்த்தெடுத்தார்கள். அதுதான், புலிகளின் முடிவுக்குப் பின்னாலும் கூட்டமைப்பு நிலைபெறக் காரணமானது. தமிழ் மக்களின் ஏகநிலை தலைவர் போன்று சம்பந்தன் பத்து வருடங்களுக்கு மேலாக செயற்படவும் காரணமானது.

முள்ளிவாய்க்கால் முடிவுக்குப் பின்னர், புலிகள் அடையாளத்தோடு இருப்பவர்களை கூட்டமைப்புக்குள் இருந்து விலக்க வேண்டும் என்கிற சம்பந்தனது நிலைப்பாடு, கூட்டமைப்பின் எதிர்கால அரசியலுக்கான அசரீரியை அப்போதே சொல்லியது.

குறிப்பாக, புலிகள் காலத்தில் அவர்களுக்காக இயங்கிய பலரும் குறிப்பாக அரசியல் ஆர்வலர்கள், ஆய்வாளர்கள் தொடங்கி பலரும் முள்ளிவாய்க்காலின் பின்னரான காலத்தில், புலிகளை 'மரணத்தின் பேய்கள்' என்ற தோரணையில் காண்பிக்கத் தலைப்பட்டார்கள். முள்ளிவாய்க்கால் நெருக்கடியை சந்தித்து வந்த மக்கள், தாங்கள் புலிகள் குறித்துச் சொல்லும் அனைத்தையும் ஏற்பார்கள் என்று நம்பினார்கள்.

ஆனால், அவர்களின் எதிர்பார்ப்பை தமிழ் மக்கள் நிறைவேற்றவில்லை. ஏனெனில், புலிகள் வேற்றுக்கிரகத்தில் இருந்து வந்தவர்கள் இல்லை. புலிகள் தமிழ் மக்களிடையே இருந்து வந்தவர்கள்; அவர்களின் சரிகளையும் பிழைகளையும் ஏற்கும் நிலையில் தமிழ் மக்கள் இருந்தார்கள். அது, புலிகளின் தமிழ் மக்கள் மீதான அர்ப்பணிப்பாலும் ஏற்பட்டது.

புலிகளின் அர்ப்பணிப்பை, மக்கள் மறப்பதற்கு தயாராக இருக்கவில்லை. ஏனெனில், தமிழின விடுதலைக்கான அர்ப்பணிப்பை புலிகளைத் தாண்டி, எந்தவொரு தமிழ்த் தரப்பும் இதுவரை செய்தது இல்லை.

பல நேரங்களில், இலங்கை அரசினது துணைக்குழுக்கள் போல இயங்கிய தரப்புகளே அதிகம். அதனால், புலிகள் மீதான மதிப்பீடு என்பது, தவிர்க்க முடியாமல் உச்சத்தில் இருந்தது. அப்படியான நிலையில், புலிகள் நிலை நிறுத்திவிட்டுப் போன கூட்டமைப்பை, ஏக நிலையில் நின்று ஆதரிக்கும் நிலைப்பாட்டுக்கு தமிழ் மக்கள் வந்தார்கள்.

அதுதான், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து போய் முன்னணியை அமைத்த போதிலும், மக்கள் அவரை மிக மோசமாக தோற்கடிக்கக் காரணமானது. ஆனால், கூட்டமைப்புக்கு மக்கள் வழங்கிய ஆணையை சம்பந்தனும் அவரது அணியினரும் சரியாக கையாளவில்லை.

குறிப்பாக, சம்பந்தன் கிட்டத்தட்ட ஒரு சர்வாதிகாரி நிலையில் நின்று தீர்மானங்களை எடுத்தார். அதற்காக தன்னைச் சுற்றி கேள்வி எழுப்பாதவர்களை வைத்துக் கொண்டார். இன்றைக்கு அதுவே, படுமோசமான நிலைக்கு கூட்டமைப்பை கொண்டுவந்து சேர்ப்பதற்கு காரணமாகி இருக்கின்றது.

சம்பந்தன் வயது மூப்பு காரணமாக வலுவிழந்துவிட்டார்; கூட்டமைப்புக்குள்ளும் அவரின் பிடி தளர்ந்துவிட்டது. அப்படியான நிலையில், அவர் கடந்த காலங்களில் கூட்டமைப்பையும், ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகளையும் கையாண்ட நிலையில் இப்போது கையாள முடியாது போயுள்ளது. அதுவும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளைக் கூட, பேச்சுக்கு அழைக்க முடியாத நிலை என்பது வீழ்ச்சியின் உச்சமாகும்.

கூட்டமைப்புக்குள் இருக்கும் மூன்று பங்காளிக் கட்சிகளையும் அதன் தலைவர்களையும், புலம்பெயர் பண முதலைகள் கையாளத் தொடங்கி விட்டன. கடந்த பொதுத் தேர்தலில், தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களையே ஒருவருக்கு ஒருவர் மோதிக்கொள்ளும் அளவுக்கான நிலையை புலம்பெயர் பணமுதலையொன்று ஏற்படுத்தியது. குறிப்பாக, அந்த முதலையின் ஊடகம், அதற்காக முழு மூச்சாக இயங்கியது.

தற்போது, ஏற்கெனவே தலையீடுகளைச் செய்யும் புலம்பெயர் பண முதலையைவிட, பெரிய பண முதலையொன்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளை தன்னுடைய ஏவல் தரப்புகள் மாதிரி கையாளத் தொடங்கி இருக்கின்றது. பணம் பத்தும் செய்யும் என்பார்கள். ஆனால் கூட்டமைப்புக்குள் இருக்கும் முக்கியஸ்தர்கள் பதினைந்தும் செய்யக் கூடிய நிலையில்தான் இருக்கிறார்கள். அதனால்தான், கூட்டமைப்பை அழித்துவிட்டு பண முதலைக்கு ஆடும் அரசியல் கூட்டொன்றை அமைப்பது தொடர்பில் நகர்வுகள் இடம்பெறுகின்றன.

ஏற்கெனவே தமிழரசுக் கட்சி, முள்ளில் விழுந்த சேலையின் நிலையில் இருக்கின்றது. அதன் தலைவரே, தமிழரசுக் கட்சியையும் கூட்டமைப்பையும் அழித்தொழிக்கும் வேலைகளில் மிக மும்முரமாக ஈடுபடுகிறார்.

அப்படியான நிலையில், தமிழரசின் சின்னத்தோடு தொடர்ந்தும் தங்கியிருக்க வேண்டிய நிலையை மாற்றும் வாய்ப்புகளை டெலோவும் புளொட்டும் பயன்படுத்தத் தொடங்கி இருக்கின்றன. அதனால்தான், டெலோவின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், கூட்டமைப்பை விபச்சார விடுதி என்று அழைப்பதற்கான நிலை ஏற்பட்டிருக்கின்றது. கூட்டமைப்பை அதன் பாராளுமன்ற உறுப்பினரே விபச்சார விடுதி என்று அழைப்பதென்பது, கூட்டமைப்புக்கு வாக்களித்த மக்கள் மீது காறி உமிழ்வதற்கு ஒப்பானது.

இராணுவத்தோடு கூடிக் குலாவிக் கொண்டிருந்த புளொட்டை, புலிகளின் காலத்துக்குப் பின்னர் கூட்டமைப்புக்குள் கொண்டு வந்ததில் சம்பந்தனினதும் மாவையினதும் பங்கு அளப்பரியது. குறிப்பாக, கொல்லப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கத்துக்கு வலிகாமத்துக்குள் காணப்பட்ட ஆதரவை அவரது மகனான சித்தார்த்தனை கூட்டமைப்புக்குள் அழைத்து வருவதன் மூலம் தானும் அறுவடை செய்யலாம் என்று மாவை நினைத்தார்.

அதனால்தான், போர் வெற்றி குறித்த கோட்டாவின் புத்தக வெளியீட்டு விழாவில், கோட்டாவுக்கு அருகில் அமர்ந்த சித்தார்த்தனை, மாவை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவராக்கினார். இன்றைக்கு அவர்கள் எல்லோரும் இணைந்துதான் கூட்டமைப்பின் அத்திவாரத்தை அசைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கூட்டமைப்பு, இன்றைக்கும் தமிழ் மக்களின் முதன்மைக் கட்சியாக இருக்கின்றது. அதனை உணர்ந்து அதன் தலைவர்கள் செயற்படாதவிடத்து, புல்லுருவிகளால் தமிழ் மக்களின் ஆணை அடகு வைக்கப்படும். சம்பந்தனும் கூட்டமைப்பும், இன்று சந்திக்கும் வாழ்ந்து கெட்டவர்களின் நிலை என்பது, தமிழ்த் தேசிய அரசியலுக்கான படிப்பினையாக இருக்கும்.

## கடிதங்கள்

### போரதீவுப்பற்றில் தொடர்ச்சியாக
## காட்டு யானைகளின் தாக்குதலால் மக்கள் அவதி



மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரை பெருநிலப்பரப்புக்கு உட்பட்ட போரதீவுப்பற்றுப் பிரதேசத்தின் திக்கோடை, தும்பங்கேணி இளைஞர் விவசாயத் திட்டம், களுமுந்தன்வெளி உள்ளிட்ட பல கிராமங்களுக்குள் இரவு வேளைகளில் அடிக்கடி காட்டு யானைகள் உட்புகுந்து, பயன்தரும் தென்னை, மரவள்ளி, வாழை உள்ளிட்ட மரங்களை அழித்து வருவதாகவும் வீடுகளையும் உடைத்துவிட்டுச் செல்வதாகவும் மேற்குறித்த கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றர்.

நாம் கடந்த யுத்த காலத்தில் எவ்வாறு பல இன்னல்களை எதிர்கொண்டு வந்தோமோ, அதுபோன்றே தற்போது இரவு பகலாக, காட்டுயானைகளின் தாக்குதல்களையும் அழிவுகளையும் எதிர்கொள்ள நேரிட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

இவ்வாறு அல்லும் பகலும் தூக்கமின்றி விழித்திருப்பதால், தினமும் நோய்களால் பீடிக்கப்படுவதாகவும், தமது நிலைமையை அறிந்தவர்கள், கண்டும் காணாததுபோல் இருப்பதானது, தமக்கு மிகுந்த மனவேதனையை அளிப்பதாகவும், அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, அப்பகுதியில் அமைந்துள்ள தளவாய் காட்டுப் பகுதியில் தங்கி நிற்கும் காட்டு யானைகளைப் பிடித்து, சரணாலயங்களில் விட்டு விடுமாறும், எல்லைப் புறங்களில் யானைப் பாதுகாப்பு வேலிகளை இடவேண்டும் எனவும் இங்கு வாழும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

– வ. சக்தி

## நட்டம் ஈட்டும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்க

# SLT குழும தவிசாளர் முன்மொழிவு

இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள தேசிய நெருக்கடி நிலையிலிருந்து மீள்வதற்கு, சொத்துகளை விற்பனை செய்வது என்பது இலகுவான தீர்வாக அமைந்திருந்தாலும், நட்டமீட்டி வரும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதனூடாக, அவற்றை தூய, அனுபவம் வாய்ந்த கூட்டாண்மை அதிகாரிகளைக் கொண்டு நிர்வகிக்கப்பதனூடாக, இலாபம் ஈட்டக்கூடிய வகையில் மாற்றியமைக்க முடியும் என SLT குழும தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ தெரிவித்தார். 'அரச உரிமை நிறுவனங்கள் முறையாக நிர்வகிக்கப்படுகின்றனவா அல்லது தவறாக நிர்வகிக்கப்படுகின்றனவா' எனும் தலைப்பில் இடம்பெற்ற CMA தேசிய நிர்வாக கணக்கீட்டு மாநாடு 2022 நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.



அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில், "பல்வேறு பிரிவுகளில் எமது நாடு பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. தற்போது நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை, தனியார் மயப்படுத்துவது பற்றி, நாட்டின் பொருளாதாரத்தை மறுசீரமைப்பது பற்றி கவனம் செலுத்தும் அரசாங்கம், பொருளாதார நிபுணர்கள், சிந்தனையாளர்கள், நன்கொடை வழங்குநர்கள் மத்தியில் அதிகளவு பேசப்படும் விடயமாக இது அமைந்துள்ளது.

"எமது நிறுவனத்தை (SLT) உதாரணமாக எடுத்துக் கொண்டால், தொழிற்சங்கங்கள், ஊழியர்கள் மத்தியில் நம்பிக்கையைப் பெறுவதற்கு, எமது அடிப்படைக் கொள்கைகளான மோசடி இன்மை, வினைத்திறனை மேம்படுத்துவது, விரயத்தைக் குறைப்பது, நிர்வாகத்தை ஈடுபடுத்துவது போன்றன தொடர்பில் அவர்களின் உடன்பாட்டைப் பெற்றோம். ஆம், இந்த நான்கு அம்சங்களையும் முன்வைத்து, எமது ஊழியர்களுடன் எவ்விதமான முரண்பாடுகளுமின்றி எம்மால் இயங்க முடிந்தது" என்றார்.

> **"ரயில்வே திணைக்களம், அளவுக்கதிகமாக பயணிகளை ஏற்றுகின்றமை, நெருக்கடி, போதியளவு திட்டமிடல் இன்மை, எரிபொருள் விரயம் போன்றன தொடர்பில் அவசரமாக கவனம் செலுத்த வேண்டும்**

அவர் தொடர்ந்து விளக்கமளிக்கையில், "அளவுக்கதிமான சுமையைக் கொண்டுள்ள எமது போக்குவரத்து துறையை எடுத்துக் கொண்டால், ரயில்வே திணைக்களம் நிலையான உட்கட்டமைப்புகளில் பல பில்லியன் ரூபாய் பெறுமதியான சொத்துகளைக் கொண்டுள்ளது.

இந்தத் தண்டவாளங்களில் எந்த வேகத்தில் ரயில்கள் பயணிக்கின்றன என்பதை நாம் அவதானிக்கின்றோம். ஊழியர்களின் பங்கேற்புடன் இவற்றை விற்பனை செய்ய வேண்டுமா அல்லது மீளமைக்க வேண்டுமா என்பது சிந்திக்க வேண்டிய விடயம்.

"நெரிசலான நேரத்தில் பொதுப் போக்குவரத்து சேவையில் பற்றாக்குறை நிலவுகின்றமை, அளவுக்கதிகமாக பயணிகளை ஏற்றுகின்றமை, நெருக்கடி, போதியளவு திட்டமிடல் இன்மை, எரிபொருள் விரயம் போன்றன தொடர்பில் அவசரமாக கவனம் செலுத்த வேண்டும். தேசிய சுமையிலிருந்து இலாபமீட்டும் முத்தாக மாற்றக்கூடிய ஓர் அரச நிறுவனமாக இது அமைந்துள்ளது" என்றார்.

நாட்டின் சட்டக் கட்டமைப்பு தொடர்பில் குறிப்பிடுகையில், "டிஜிட்டல் கட்டமைப்புகளினூடாக இலங்கையின் நீதிச் செயன்முறையை மேம்படுத்தி, காலதாமதமின்றி தீர்ப்புகளை வழங்க முடியும். அதிகளவான வழக்குகள் மற்றும் தீர்வுகளை வழங்குவதற்கு நீண்ட

> **"எமது நிறுவனத்தை [SLT] உதாரணமாக எடுத்துக் கொண்டால், ஊழியர்கள் மத்தியில் நம்பிக்கையைப் பெறுவதற்கு, எமது அடிப்படைக் கொள்கைகளான மோசடி இன்மை, வினைத்திறனை மேம்படுத்துவது, விரயத்தைக் குறைப்பது போன்றன தொடர்பில் அவர்களின் உடன்பாட்டைப் பெற்றோம்**

காலம் எடுக்கின்றமை காரணமாக, எமது குடிமக்களுக்கு பொருத்தமான சட்ட மீளமைப்பு மற்றும் சமத்துவமான நிவாரணத்தை பெறுவதற்கான வாய்ப்புகள் இல்லை. ஆவணங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைப்புகளிடையே போதியளவு ஒன்றிணைவு இன்மையால், கட்டமைப்பு அதிகளவு சுமையைக் கொண்டதாக காணப்படுகின்றது. பெருமளவானோர், தமது அதிக நாள்களை நீதிமன்றத்தில் செலவிட்ட போதிலும், தமது வழக்கு தொடர்பில் மிகவும் குறைந்த தகவல்களுடனே வெளியே வருகின்றனர்" என்றார்.

பெர்னாண்டோ மேலும் குறிப்பிடுகையில், "எமது விவசாய துறையும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளது. அதுபோலவே எமது சுகாதாரப் பராமரிப்பு துறையும் சுமைகளை எதிர்கொண்டுள்ளது. இத்தகைய சவால்களைப் புரிந்து கொண்டு, இந்தப் பிரச்சினைகளை தீர்க்க முன்வர வேண்டும்.

முக்கியத்துவம் வாய்ந்த துறைகள் மற்றும் சேவைகள், வினைத்திறன் வாய்ந்த, வெளிப்படையான மற்றும் இலாபமீட்டும் அமைப்புகளாக மாற்றப்படுவதனூடாக, மக்களின் வாழ்க்கையை மாற்றியமைக்க அவற்றை பயன்படுத்த முடியும். இந்நாட்டுக்கு தேவையான உண்மையான கட்டமைப்பு மாற்றமாக இது அமைந்துள்ளது.

தற்போது அரச நலன்புரித் திட்டங்கள், செல்வந்தர்கள் அல்லது வறியவர்கள் என பாகுபாடின்றி அரசியல் தலையீட்டின் காரணமாக அனைவரையும் சென்றடைகின்றன. உண்மையில், இந்த நலன்புரித் திட்டங்கள், சமூகத்தில் தாழ்ந்த நிலையில் காணப்படுவோரை முறையாக இனங்கண்டு, அவர்களை சென்றடையச் செய்ய வேண்டும். இதற்கு டிஜிட்டல் கட்டமைப்பை பயன்படுத்தலாம்" என்றார்.

"ஆம், நாம் பல சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்துள்ளோம். நெருக்கடிகள் நிலவுகையில், அவற்றை வாய்ப்புகளாக மாற்றிக் கொள்வதற்கு, புதிய வழியில் பார்வையிடுவதுடன், சிந்திப்பது மற்றும் பதிலளிப்பது போன்றன தேவைப்படுகின்றன. இதனை எவ்வாறு செய்யலாம் என்பதை SLT உணர்த்தியுள்ளது. வாய்ப்புகளை கையகப்படுத்துவதற்கு சிறந்த உதாரணமாக SLT அமைந்திருப்பதுடன், தேசத்துக்கு அவசியமான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாக அமைந்துள்ளது" என பெர்னாண்டோ தெரிவித்தார்.

கர்நாடகா

# 230 பெண்களுக்காக குவிந்த 14,000 மணமகன்கள்

திருமண வரன் பார்க்கும் நிகழ்வொன்றில், 230 பெண்களை வரன் பார்க்க, 14,000 இளைஞர்கள் படையெடுத்து வந்த சம்பவம் கர்நாடகாவில் இடம்பெற்றுள்ளது.

கர்நாடக மாநிலம் மாண்டியா மாவட்டத்தில் உள்ள ஆதிசுஞ்சனகிரி தொகுதியில் திருமண வரன் பார்க்கும் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றுள்ளது.

அதில் சுமார் 230 பெண்கள், மணமகன் தேவை எனப் பதிவு செய்திருந்த நிலையில், அந்நிகழ்ச்சிக்கு 14,000 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் விண்ணப்பித்திருந்ததால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனால் நிகழ்ச்சி நடத்தியவர்கள் என்ன செய்வதென்று புரியாமல் குழம்பி போனதாகவும், பின்னர் இளைஞர்களிடம் பேசி அனுப்பி வைத்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.



உத்தரப் பிரதேசம்

## 7 அடி குழியில் கணவனை புதைத்த மனைவி

பெண்ணொருவர் தனது கணவரைக் கொலைசெய்து, 7 அடி ஆழம் கொண்ட குழியொன்றில் புதைத்த சம்பவம், 2018ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம், உத்தரப் பிரதேசத்தின் காசியாபாத் நகரில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நகரைச் சேர்ந்த சவிதா என்ற பெண், தனது கணவர் சந்திரவீர் என்பவரைக் காணவில்லை எனவும், தனது கணவரின் இளைய சகோதரனின் மீது தனக்கு சந்தேகம் இருப்பதாகவும் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்திருந்தார்.

இப்புகார் அளிக்கப்பட்டு நான்கு வருடங்கள் கடந்துள்ள நிலையில், அண்மையில் குற்றப் பிரிவுப் பொலிஸார் இது குறித்து சவிதாவின் மகளிடம் நடத்திய விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

விசாரணையின் போது, சவித்தாவின் மகள் "எங்களது வீட்டுக்கு பக்கத்துவீட்டு அருண் மாமா அடிக்கடி வருவார்" எனத் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து அருண் மீது பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சவிதாவும் அருணும் 2017ஆம் ஆண்டில் இருந்து தகாத உறவில் இருந்து



வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

மேலும், இவர்களது விடயம் சவிதாவின் கணவருக்குத் தெரியவரவே ஆத்திரமடைந்த அவர், சவிதாவை கடுமையாகத் தாக்கியுள்ளார். இதனால் சவிதா அருணுடன் சேர்ந்து சந்திரவீர் தலையில் துப்பாக்கியால் சுட்டு, கொலை செய்துள்ளார். பின்னர் அவரது தலையை கோடரியால் கொத்தி, காட்டுப்பகுதியில் புதைத்துள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

அதுமட்டுமல்லாது, சந்திரவீரைக் கொலை செய்வதற்கு முன்னரே, இருவரும் 7 அடி ஆழத்தில் குழியொன்றைத் தோண்டி வைத்துள்ளனர் எனவும் அக் குழியில், சந்திரவீரின் உடலை புதைத்து, அதன் மீது சீமெந்து நிரப்பியுள்ளனர் எனவும் தெரிய வந்துள்ளது. இதனையடுத்து அருண் மற்றும் சவிதாவைப் பொலிஸார் கைது செய்து, சிறையில் அடைத்துள்ளனர்.

கர்நாடகா

## உரிமையாளரின் உயிரை காப்பாற்றிய 'டொமி'

காட்டுக்குள் தொலைந்து போன உரிமையாளரைக் கண்டுபிடிக்க, அவரது வளர்ப்பு நாய் உதவி செய்த சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


கர்நாடகாவின் ஷிமோகா என்ற இடத்தை சேர்ந்தவர் சேகரப்பா. இவர் அயனூர் என்ற இடத்தில் ஒரு தனியார் உணவகமொன்றில் பணியாற்றி வருகிறார்.

கடந்த பத்து வருடங்களாக வேலைக்கு செல்லும் முன்னர் தினமும் அருகில் உள்ள காட்டுக்கு சென்று விறகு வெட்டி எடுத்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் வழக்கம் போல, சனிக்கிழமை (12) காலை 6 மணியளவில் காட்டுக்குச் சென்ற சேகரப்பா, 10 மணியாகியும் வீடு திரும்பாததால் அவரது குடும்பத்தினர் சந்தேகம் அடைந்துள்ளனர்.

இதனையடுத்து சேகரப்பாவின் குடும்பத்தினர், நண்பர்கள், உறவினர்கள் என சுமார் 50 பேர் தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

எனினும் சேகரப்பாவை கண்டுபிடிக்க முடியவில்லை. இதனால் அவரது




குடும்பத்தினர் சேகரப்பா ஆசையாக வளர்த்த 'டொமி' என்ற நாயின் உதவியை நாடியுள்ளனர்.

இந்நிலையில் மீட்புக் குழுவினர் ஒரு புறம் தேட, 'டொமி'யும் சேகரப்பாவைத் தேடி காட்டுக்குள் சென்றுள்ளது.

இந்நிலையில் ஒரு மரத்தின் அடியில் சுய நினைவை இழந்து கிடந்த தனது உரிமையாளரைக் கண்டுபிடித்த 'டொமி', குரல் கொடுத்துள்ளது.

'டொமி'யின் குரலை கேட்டு, சேகரப்பா இருந்த இடத்திற்குச் சென்ற மீட்பு குழுவினர், அவரை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

சேகரப்பாவை சோதித்த மருத்துவர்கள் அதிக வெப்பம் மற்றும் மூச்சு திணறல் ஏற்பட்டதால் அவர் மயக்கம் அடைத்திருக்கலாம் எனத் தெரிவித்தனர்.



ஒடிசா

## மனைவியை விலைபேசிய கணவர்

பணத்துக்காக நபர் ஒருவர் தனது மனைவியை தொழிலதிபர் ஒருவருக்குத் திருமணம் செய்து வைத்த சம்பவம், ஒடிசா மாநிலம் கலஹண்டி மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

கிரா பாரூக் என்பவருக்கும், நார்லா கிராமத்தைச் சேர்ந்த பூர்ணமி என்ற பெண்ணுக்கும் ஒரு வருடத்துக்கு முன்னர் திருமணம் நடைபெற்றுள்ளது. இந்நிலையில், ஒக்டோபர் 30 ஆம் திகதி, இருவரும் பணி நிமித்தம் புதுடெல்லிக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

நவம்பர் 2ஆம் திகதி, பாரூக், ஐந்து இலட்ச ரூபாய்க்கு ஈடாக, அவரது மனைவியை அங்குள்ள தொழிலதிபர் ஒருவருக்கு வலுக்கட்டாயமாக திருமணம் செய்து கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

இந்த மொத்த திருமணம் குறித்த ஆதாரங்களும் தொழிலதிபரின் அலைபேசியில் பதிவாகியுள்ளது. இந்நிலையில் பூர்ணமி தனது தந்தைக்கு இதனை அனுப்பி, தன்னைக் காப்பாற்றும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனைப் பார்த்து அதிர்ச்சியடைந்த அப்பெண்ணின் தந்தை, இது குறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்ததைத் தொடர்ந்து, கிரா பாரூக்கைப் பொலிஸார் கைது செய்தனர்.

## மாணவரின் ஓவியத்தை கொண்டாடும் 'கூகுள்'

'கூகுள்' நிறுவனம் நடத்திய 2022ஆம் ஆண்டுக்கான 'டூடுல்' போட்டியில் வெற்றி பெற்றவர்களை அந்நிறுவனம் அண்மையில் அறிவித்துள்ளது.

மேலும், இதைச் சிறப்பிக்கும் வகையில், 'டூடுல்' ஒன்றையும் கூகுள் நிறுவனம் வெளியிட்டுளளது.

அந்தவகையில் இவ்வாண்டு கொல்கத்தாவைச் சேர்ந்த ஷ்லோக் முகர்ஜி என்ற



மாணவர் இப்போட்டியில் வெற்றிபெற்றுள்ளார்.

'இந்தியாவின் அறிவியல் வளர்ச்சியை முன்னிலைப்படுத்த வேண்டும்' என்ற எண்ணக்கருவில், முகர்ஜி வரைந்த ஓவியம் வெற்றி பெற்றதை அடுத்து, அந்த ஓவியத்தையே தற்போது கூகுள் டூடுலாக வெளியிட்டுள்ளது.

இந்தியா முழுவதும் 100 நகரங்களில் இருந்து 1 முதல் 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இந்தாண்டு 'டூடுல்' போட்டி நடத்தப்பட்டது. இதில், மொத்தம் 1,15,000 பேர் பங்கேற்றனர். 'அடுத்த 25 ஆண்டுகளில், எனது இந்தியா...' என்ற தலைப்பின்கீழ் இப்போட்டி நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குடியரசுத் தலைவரை உருவக் கேலி செய்த அமைச்சர்

இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவினின் தோற்றம் குறித்து, மேற்கு வங்க மாநில அமைச்சர் அகில் கிரி விமர்சித்துள்ளமை, அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு வங்கத்தில் முதலமைச்சர் மம்தாவின் சட்டப்பேரவையில் அமைச்சராக இருக்கும் அகில் கிரி அண்மையில், நந்திகிராம் தொகுதி



மக்களிடையே பேசும் போது, "பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த சுவேந்து அதிகாரி, என் தோற்றம் நன்றாக இல்லை என்கிறார். அவர் அழகாக இருக்கிறார். நாங்கள் யாரையும் அவர்கள் தோற்றத்தை வைத்து மதிப்பிடுவதில்லை. குடியரசுத் தலைவர் பதவியை நாங்கள் மதிக்கிறோம். ஆனால், குடியரசுத் தலைவர் மாளிகை எப்படி இருக்கு" என விமர்சித்தார்.

இதனைத் தொடர்ந்து, அமைச்சர் அகில் கிரி குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவைதான் குறிப்பிட்டு விமர்சித்திருக்கிறார் என்று கூறி, பலரும் கடும் கண்டனங்களைப் பதிவிட்டு வருகின்றனர்.



அவுஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து:

# ODI தொடர் இன்று ஆரம்பிக்கிறது

அவுஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது, அடிலெய்ட்டில் இன்று காலை 8.50 மணிக்கு ஆரம்பிக்கவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

அடுத்தாண்டு உலகக் கிண்ணத் தொடர் இடம்பெறவுள்ள நிலையில், அதற்கு இரண்டு அணிகளும் தமது வீரர்களைச் சோதித்துப் பார்ப்பதற்கான களமாக இத்தொடர் காணப்படுகின்றது.

அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்த வரையில், மிற்செல் ஸ்டார்க் தனது பெறுமதியை வெளிக்காட்ட வேண்டியுள்ளதுடன், ஆரோன் பின்ஞ்சின் ஓய்வுக்குப் பின்னர் அணித்தலைவராக பற் கமின்ஸ் பொறுப்பேற்றுள்ளதுடன், அணியில் அவரது தொடக்க ஆட்டக்காரராகப் பிரதியிடவுள்ள ட்ரெவிஸ் ஹெட் ஆகியோருக்கு நீண்ட காலத்துக்கு தமதிடத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வாய்ப்புள்ள தொடராக இத்தொடர் காணப்படுகின்றது.

மறுப்பக்கமாக இங்கிலாந்தைப் பொறுத்தவரையில் ஜேஸன் றோய், ஜேம்ஸ் வின்ஸ், சாம் பில்லிங்ஸ், ஒலி ஸ்டோன் ஆகியோர் தம்மை நிரூபிப்பதற்கான சிறந்த வாய்ப்புள்ள தொடராக இத்தொடர் காணப்படுகின்றது.

உலகக் கிண்ணம்:

## முதல் போட்டிகளில் மனே இல்லை

கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரில், கால் காயமொன்று காரணமாக செனகலின் முதற் போட்டிகளை அவ்வணியின் முன்களவீரரான சாடியோ மனே தவறவிடுவாரென அந்நாட்டு கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அதிகாரியான அப்துல்லாயி செள தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் கழகப் போட்டியில் காயம் காரணமாக வெளியேறியபோதும் செனகலின் குழாமில் மனே பெயரிடப்பட்டிருந்தார்.

செனகலானது தமது உலகக் கிண்ணத்தை எதிர்வரும் திங்கள்கிழமை ஆரம்பிப்பதுடன், இம்மாதம் 25ஆம், 29ஆம் திகதிகளிலும் போட்டிகளைக் கொண்டுள்ளது.



## யுனைட்டெட் செல்லும் மப்பே?

பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முன்களவீரரான கிலியான் மப்பே மூலம் தமது முன்களவீரரான கிறிஸ்டியானோ றொனால்டோவை பிரதியிட இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் திட்டமிடுவதாகக் கூறப்படுகிறது.

பியர்ஸ் மோகனுடனான நேர்காணலைத் தொடர்ந்து யுனைட்டெட்டுக்காக றொனால்டோ விளையாடக் கூடாது என யுனைட்டெட்டின் முகாமையாளர் எரிக் டென் ஹக் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

# சம்பியனான கிண்ணியா மத்திய கல்லூரி

எஸ்.எஸ்.குமார் கதிரவன்

திருகோணமலை சிங்காரவேலு நிதியம் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரொன்றை அண்மையில் நடத்தியது. 14 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கிடையிலான இத்தொடரில் திருகோணமலை, கிண்ணியா கல்வி வலயங்களைச் சேர்ந்த 14 பாடசாலைகளின் அணிகள் பங்கு கொண்டன.

திருகோணமலை கல்வி வயலயத்தில் இருந்து ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, புனித சூசையப்பர்கல்லூரி, உவர்மலை விவேகானந்தா கல்லூரி, கலைமகள் வித்தியாலயம், சல்லி அம்பாள் வித்தியாலயம், கைலேஸ்வரா கல்லூரி சாஹிரா கல்லூரி, செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம், இறக்கக்கண்டி அல் ஹம்றா வித்தியாலயம், அன்புவளிபுரம் கலைமகள் வித்தியாலயம் அணிகளும், கிண்ணியா கல்வி வலயத்தில் இருந்து கிண்ணியா மத்திய கல்லூரி, அப்துல் மஜீது வித்தியாலயம், அல் அமீன் வித்தியாலயம், அல் அதான் வித்தியாலய அணிகள் பங்கு கொண்டன.

ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் இத்தொடர் நடைபெற்றது.

இறுதிப் போட்டி, கிண்ணியா மத்திய கல்லூரிக்கும் கிண்ணியா அப்தல் மஜீது வித்தியாலயத்துக்கும் இடையே நடைபெற்றது. இடைவேளை வரை இரண்டு அணிகளுக்கும் இடையே கடுமையான போட்டி நிலவியது. இரண்டு அணிகளும் கோல்கள் எதனையும் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை காணப்பட்டது. இடைவேளையின் பின்னர் கிண்ணியா மத்திய கல்லூரி 2 கோல்களைப் பெற்று வெற்றியை தமதாக்கிக் கொண்டனர்.

இத்தொடரில், செல்வநாயகபரம் இந்து மகா வித்தியாலயத்தை சேர்ந்த ராஜேஸ்வரன் கீர்த்திகன் வளர்ந்து வரும் வீரர் விருதையும், அதிக கோல்களைப் பெற்றுக் கொடுத்த வீரராக (7 கோல்கள்) கிண்ணியா அல் அமீன் வித்தியாலயத்தைச் சேர்ந்த முகமது ஜசீர், கிண்ணியா மத்திய கல்லூரியைச் சேர்ந்த என். சாதீர் சிறந்த கோல் காப்பாளர் விருதையும், அணித்தலைவர் அக்கீப் சிறந்த வீரர் விருதையும் பெற்றுக் கொண்டனர்.



உலகக் கிண்ணம்:

## பிரான்ஸ் குழாமிலிருந்து விலகிய என்குங்கு

கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரின் பிரான்ஸ் குழாமிலிருந்து காயம் காரணமாக முன்களவீரரான கிறிஸ்டோபர் என்குங்கு விலகியுள்ளார்.

பயிற்சியின்போது நேற்று முன்தினமே என்குங்கு காயமடைந்திருந்தார்.

போல் பொக்பா, என்கலோ கன்டே, பிரஸ்னல் கிம்பெம்பேயைத் தொடர்ந்து காயம் காரணமாக உலகக் கிண்ணத்தைத் தவறவிடும் நான்காவது முன்னணி பிரான்ஸ் வீரர் என்குங்கு ஆவார்.

ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான் பெண்களுக்கு

# பூங்கா, ஜிம் தடை

ஆப்கானிஸ்தானில் கடந்த வருடம் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றியதிலிருந்து அங்கு பல்வேறு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர்.

குறிப்பாக பெண்களின் அடிப்படை உரிமைகளை பறிக்கும் விதமாக பல்வேறு கட்டுப்பாடுகளை தலிபான் அரசு விதித்து வருகின்றது.

அதிலும் ஆண்களின் துணையின்றி பெண்கள் வெளியே செல்வதற்கும், உயர்கல்வி கற்பதற்கும், விளம்பரங்களில் நடிப்பதற்கும், தொலைக்காட்சிகளில் தோன்றுவதற்கும் தலிபான்கள் தடை விதித்திருந்தமை சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளை



ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் பெண்கள் ஜிம் மற்றும் பூங்காவுக்குச் செல்ல தலிபான் அரசு தடை விதித்துள்ளதோடு, தடையை மீறுபவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படுமெனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து மத விவகாரங்களுக்கான துறையின் செய்தி தொடர்பாளர் முஹமது அகே மொஹஜர் கருத்துத் தெரிவிக்கையில், "நாங்கள் ஆட்சியை பொறுப்பேற்றதில் இருந்து கண்ணியத்தோடு பெண்களின் உரிமையை காக்க எவ்வளவோ முயற்சிகள் எடுத்தோம்.

இங்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் பாலின வித்தியாசமே இல்லாமல் போயுள்ளது. பெண்கள் ஹிஜாப் அணிவது, பொது இடங்களில் தலைப்பாகை அணிவது உள்ளிட்ட நடைமுறைகளை பின்பற்றத் தவறுகின்றனர்.

பூங்காக்கள் மற்றும் ஜிம்களைப் பெண்கள் மட்டும் பயன்படுத்துவதற்கு தனி நாள்களை ஒதுக்கச் சொல்லி வலியுறுத்தினோம். ஆனால் யாரும் அதை நடைமுறைப்படுத்தவில்லை. இதன் காரணமாகவே இது போன்ற கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்பட்டுள்ளது" என்றார்.

இந்தோனேசியா

ஜி–20 மாநாடு;

# இராப்போசனத்தை புறக்கணித்த பைடன்




உலகநாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ள ஜி20 மாநாடு இந்தோனேஷியாவின் பாலித் தீவில் உள்ள, நுஸா துவாவில் நேற்றுமுன் தினம் (15) ஆரம்பமானது.

இதில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான், இந்திய பிரதமர் மோடி, இந்தோனேஷிய ஜனாதிபதி ஜோகோவிடோடோ உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிலையில் இம்மாநாட்டின்போது அளிக்கப்பட்ட இரவு விருந்தை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் புறக்கணித்துள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஜோ பைடனைச் சந்தித்த கம்போடிய பிரதமர் ஹன் சென்னுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்தே, அவர் குறித்த இரவு விருந்தைத் தவிர்த்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


எவ்வாறு இருப்பினும் ஜோ பைடனின் நிகழ்ச்சிகள் திட்டமிட்டபடி நடைபெறும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானியா

# காலணி துடைப்பதில் கின்னஸ் சாதனை

பிரித்தானியாவில் அதிகளவில் காலணிகள் துடைப்பதில் 'ஸ்னீக்கர் பராமரிப்ப' (sneaker care) என்ற நிறுவனம் அண்மையில் உலக சாதனை படைத்துள்ளது.

இலண்டனில் இயங்கி வரும் குறித்த நிறுவனத்தில் 325 பேர் ஒன்றாக அமர்ந்து ஒரே நேரத்தில் காலணிகளைத்



துடைத்து சுத்தம் செய்து கின்னஸ் சாதனை படைத்துள்ளனர்.

ரஷ்யா



# உக்கிரமடைந்து வரும் உக்ரேன்– ரஷ்யப் போர்

**ஒரே நாளில் 80 க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசித் தாக்குதல்**

உலக நாடுகளின் எதிர்ப்புகளையும் மீறி உக்ரேனுக்கும் ரஷ்யாவுக்கும் கடந்த 8 மாதங்களுக்கு மேலாகப் போர் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் அண்மையில் ரஷ்யாவுடனான போரில் தங்களுக்கு வெற்றி கிட்டி வருவதாக உக்ரேன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்திருந்த நிலையில், உக்ரேன் மீது ரஷ்யா 80க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளது.


உக்ரேன் மீது நேற்றுமுன்தினம் (15) மாத்திரம் 12க்கும் மேற்பட்ட நகரங்களில் 80க்கும் மேற்பட்ட ஏவுகணைகள் வீசி, ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



போர் தொடங்கியதில் இருந்து இது மிகப்பெரிய தாக்குதல் எனவும் உக்ரேன் விமானப்படை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இந்நிலையில் ஒரே நேரத்தில் 85 ஏவுகணைகள் ரஷ்யத் தரப்பில் இருந்து ஏவப்பட்டதாகவும், தங்கள் எரிசக்தி உட்கட்டமைப்பை சீர்குலைக்க தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் உக்ரேன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி குற்றம்சாட்டியுள்ளார்.

பிரித்தானியா



# ஐன்ஸ்டீனை மிஞ்சிய சிறுவன்

நுண்ணறிவு திறனில் அறிவியல் மேதை ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், ஸ்டீபன் ஹாவ்கிங்கை பின்னுக்குத் தள்ளி பிரித்தானியாவைச் சேர்ந்த யூசுஃப் ஷா என்ற சிறுவன் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார்.

ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், ஹாவ்கிங் ஆகியோரின் நுண்ணறிவு திறன் அளவீட்டு எண் 160 ஆக இருக்கும் நிலையில், 11 வயதான இச்சிறுவனின் நுண்ணறிவு திறன் அளவீட்டு எண் 162 ஆக அளவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் "எவ்வளவு தான் திறமைசாலியாக இருந்தாலும் கடின உழைப்பு முக்கியம் என்பதை எனது மகனுக்கு அறிவுறுத்தி வருகிறேன்" என யூசுஃப் ஷாவின் தந்தை இர்ஃபான் தெரிவித்துள்ளார்.

மேலும் வரும் காலத்தில் யூசுஃப் கேட்பிரிட்ஜ் அல்லது ஒக்ஸ்போர்ட் பல்கலைகழகத்தில் கணிதம் படிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மூளைக்கு வேலை கொடுக்கும் எந்தச் சவாலான வேலையையும் செய்ய எப்போதும் தான் விருப்பத்துடன் தயாராக இருப்பதாகக் கூறும் யூசுஃப், எண்ணியல் குறுக்கெழுத்துக்கு விடை காண்பதிலும், ரூபிக் கியூபை கையாள்வதிலும் எப்போதும் ஆர்வமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா

# "2024 இல் நான் களமிறங்குவேன்"

2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை, நான்கு வருடங்கள் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்தவர் டொனால்ட் ட்ரம்ப்.

இவரது ஆட்சி காலத்தில் வடகொரியா, இஸ்ரேல், அரபு நாடுகள் ஆகியவற்றோடு அமெரிக்கா நட்புறவை ஏற்படுத்துவது போன்ற பல்வேறு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதனையடுத்து 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்ப் மீண்டும் போட்டியிட்டார். எனினும் அத்தேர்தலில் ட்ரம்ப் தோல்வியடைந்ததால் புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிலையில், 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில், மீண்டும் களமிறங்கப்போவதாக ட்ரம்ப் நேற்று முன் தினம் (15) அறிவித்துள்ளார்.

இதன்போது, "அமெரிக்காவை மீண்டும் சிறந்த நாடாக மாற்றவே இத் தேர்தலில் போட்டியிடவுள்ளேன்" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 17 நவம்பர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.